நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை, தோற்றம் 14.09.1901

# செந்தமிழ்

## திங்கள் இதழ்

தொகுதி: 110 பகுதி: 09 செப்டம்பர்-2016

திருவள்ளுவர் ஆண்டு 2047

விலை: ரூ.10



வள்ளல் பாண்டித்துரைத் தேவர்

1867-1911



மன்னர் பாஸ்கர சேதுபதி

1868-1903

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

## தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி | தலைவர் |
| மருத்துவர் ந.சேதுராமன் | துணைத் தலைவர் |
| வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி | செயலாளர் |
| திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி | உறுப்பினர் |
| முதுமுனைவர் இரா.இளங்குமரனார் | உறுப்பினர் |
| பொறியாளர் க.சி.அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| வழக்குரைஞர் கே.ஆர்.என்.கருணாகரன் | உறுப்பினர் |
| திரு. அழ.சித்தையா | உறுப்பினர் |
| வழக்குரைஞர் ச.தசரதராமன் | உறுப்பினர் |
| திரு. துரை கருணாநிதி | உறுப்பினர் |
| திரு. வி.சத்யநாராயணன் | உறுப்பினர் |

## செந்தமிழ் கலை மற்றும் ஓரியண்டல் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| வழக்குரைஞர் ச.தசரதராமன் | தலைவர் |
| திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி | செயலாளர் |
| வழக்குரைஞர் ச.மாரியப்ப முரளி | உறுப்பினர் |
| பொறியாளர் க.சி.அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. அழ.சித்தையா | உறுப்பினர் |
| திரு. வி.சத்யநாராயணன் | உறுப்பினர் |
| வழக்குரைஞர் து.மாயராசன் | உறுப்பினர் |
| வழக்குரைஞர் சு.சிவசாமி | உறுப்பினர் |
| பொறியாளர் லெ.சிவக்குமார் | உறுப்பினர் |
| வழக்குரைஞர் ஆர்.பாலாஜி | உறுப்பினர் |
| திரு. ஜெ.பாலதண்டாயுதம் | உறுப்பினர் |

# பொருளடக்கம்


1. இதழ் மணம் 4

2. தனக்குவமை இல்லாத் தனிப்பெரு நூல்-3 6
முதுமுனைவர் இரா.இளங்குமரன்

3. குறுந்தொகைப் பாடல்களின் பொருள் கட்டமைப்பு 11
முனைவர் மு.மணிவேல்

4. திருமுறைகளில் வாழ்க்கை முறைகள்
மூவர் தேவாரங்களில் வாழ்வியல் நெறிகள் 16
முனைவர் உ.கருப்பத்தேவன்
சென்றமாத இதழின் தொடர்ச்சி

5. வ.சுப.மாணிக்கனார் நூற்றாண்டு விழாமலர்
அரங்கு ஆடுமா? 26
புலவர் சா.பன்னீர்செல்வம்

6. சிறுபஞ்சமூலத்தில் மருத்துவம் 32
முனைவர். செ.ரவிசங்கர்
சென்றமாத இதழின் தொடர்ச்சி

7. உலகியலும் இலக்கியமும் 11
சி.கணேசையர்

8. சங்கச் செய்திகள் 39

# இதழ் மணம்

நாட்டு மக்களின் ஆளுமை என்பது எல்லா மக்களுக்கும் உழைப்பதற்குரிய வேலைவாய்ப்பு, அதன் வழியாகிய பொருளாதாரம், அப்பொருளதிகாரத்தின் வழியாக மக்களுக்குக் கிடைக்கின்ற மரியாதை என்பதாகும். வேலை இல்லாதவர்களுக்கு உபரி கொடுப்பது, முறையான பொருளாதார மேம்பாட்டுப் பணியின்றி வேலை என்ற பெயரில் நாட்கூலி கொடுப்பது குடிமக்களுடைய மரியாதையும் உரிமையும் விலையாக்கப்படுவதாகும்.

பேராசான் இரா.இளங்குமரனார், உலகம் ஆகாது எனக்கழித்த கழிவாக்கத் தொழில்களுக்கு முன்னுரிமை, வளநிலங்களை வாழ்வியல் மூலங்களை அழிப்பது என அரசும் அதற்குத்தப்புக்கொட்டும் தொலைக்காட்சியும், நாட்டைப்பாழாக்குகின்றது; அதனோடு மொழிச் சிதைவைத் தம் எழுதுகோல் கொண்டு நடத்தும் புதுக்கேடர் பலர் அங்கு நுழைந்தனர் என ஆசிரியர் தம் முதுமையில் ஆற்றாமையை வெளியிடுவது உளம் கொள்ளத் தக்கது. நாடெங்கும் நச்சுப்பணி நடக்கிறது; அதனால் பெரியவர்கள் செய்வது அறியாது தவிக்கின்றனர். தொல்காப்பியர் மரபுகாத்தார்; நாம் மரபைச் சிதைக்கிறோம். "உள்ளது சிதைப்போர் உளர் எனப் படார்" என்பது உயர்ந்தோர் கூற்று. ஆறுகளைச் சிதைத்தோம்; மலையை அழித்தோம்; நீர் ஆதாரங்களை மறந்தோம்; மழை இல்லை; மாநிலங்களிடையே சண்டை; உச்சநீதிமன்றத்தின் ஆணையும் அறிவுரையும்; பயன் என்ன? மலைவளத்தைக் காப்பது, காடுகளைப் பேணி வளர்ப்பது; மலைப்பகுதிக்குள் வேற்றவர் நுழையாமல் இருந்தால் காடு பாதுகாக்கப்படும்; மழை பெய்யும்; குறைந்த பட்சம் புதிய அணைகளையாவது கட்டாமல் இருக்கலாம்; அணைகள் கட்டிப் பெருமை தேடிக்கொண்டனர்; அதனால் பல பகுதிகளில் விளை நிலங்கள் தரிசாயின. பிரம்மாண்டங்களைச் செய்தால் புகழ்பெறலாம் என்பது ஒருவகையான மனமயக்கம். அடிமட்டத்தில் இருக்கின்ற மக்களைப் பாதுகாக்காமல் அவர்களுடைய தொழில் நசிந்த பின்னர் பெரிய தொழிற்சாலையால் என்னபயன்? காந்தியடிகள் ஒவ்வொருவீடும் தொழில் நிறுவனமாக இயங்கும் முறையை ஆதாரக் கோட்பாடு, கல்விமுறை, வாழ்க்கை முறை என்றார்; இன்று நாடு எதிர் திசையில் போய்க் கொண்டிருக்கிறது. தாய்மொழிக் கல்வி என்றார் காந்தியடிகள். நாம்

இன்று அதனை மறந்தோம். எங்கோ போகிறது நாடு? இளங்குமரனாரின் இந்தக்கேள்வி வாய்மையின் தூய்மையின் வெளிப்பாடு.

சென்ற நூற்றாண்டில் பேராசான் சி.கணேசையர் செந்தமிழ் இதழில் "உலகியலும் இலக்கியமும்" என்னும் கட்டுரை வரைந்துள்ளார்.

கந்தப்புராணச் செய்யுள், கம்பராமாயணம், குன்றம்பூதனாரின் பரிபாடல் ஆகிய செய்யுட்களைச் சுவைபட எடுத்துரைக்கின்றார். அன்றாட வாழ்க்கையின் நடைமுறை இன்பதுன்பம் ஆசிரியருடைய இலக்கிய நயம் நிறைந்த சொல் சித்திரத்தால் இன்பூட்டுவதைப் படித்துப் படித்து மகிழலாம். சங்கச் செய்யுள் பரிபாடல்; அதனை ஆசிரியர் சுவைபட எளிமையும் இனிமையும் நிறைந்த சொற்களால் படைத்திருப்பது வாசகர் உணரத்தக்கது.

பின்னும் சில கட்டுரைகள் சென்ற இதழின் தொடர்ச்சியாக வருகின்றன. படித்து இன்புறுக.

# தனக்குவமை இல்லாத் தனிப்பெரு நூல் 3

முதுமுனைவர் **இரா.இளங்குமரன்**

உலகம் ஆகாது எனக் கழித்த கழிவாக்கத் தொழில்களுக்கு முன்னிடம் தந்து, வளநிலங்களையும், வாழ்வியல் மூலங்களையும் கெடுக்கும் அரசுகளுக்கும், உலகக் குப்பை, சேறுகளை எல்லாம் வாரிக் கொட்டும் தொலைக் காட்சிகளை வீடு தோறும் புகலிடமாக்கி உழைப்பு, பண்பாடு முதலியவற்றைக் கெடுத்துவரும் கேட்டுக்கும் கேடாம், மொழிச் சிதைவுக்கேடு.

மொழிச்சிதைவு மிகமிக, அஃதொரு சிறுகுறு மொழியாகி, இடப்பரப்பு, வளப்பரப்பு, மக்கட்பரப்பு என்பவற்றைக் கெடுத்துவிடும் என்பதைக் கற்றோரும், கற்று எழுதவல்ல எழுத்துவல்லாரும் எண்ணுவதில்லை!

*"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்*
*வைத்தூறு போலக் கெடும்"* *(435)*

"எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்" *(429)*

என்னும் வாழ்வியல் ஆணைக் குறளை எண்ணுவதில்லை.

"மெய்யியல் என்பது சொல்பவர்க்கும் புரியாமல் கேட்பவர்க்கும் புரியாமல் இருப்பது என்பது போல், புதுக்கேடர் புகுந்து எழுதுகோல் எடுத்துளர்!

சென்னை மக்கள் பேச்சு மொழியில் திருக்குறளுக்கு உரையெழுதுவேன் என்றெழுதி ஒழிந்தது! அவ்வாறு, ஒரு தமிழ்ப்பிறவி எழுதாது! ஒரு வேளை தமிழ்ப்பிறவியே எழுதினாலும், கீதை, விவிலியம், குரான் என்பவற்றிற்கு எழுதினால் என்ன நேரும் என்பதை எண்ணாமல் எழுதாது!

தமிழைக் கெடுத்தால் எவர் தடுப்பார் என்னும் துணிவு! ஒன்றுபட்டுத் தடுக்கமாட்டார் என்னும் தெளிவு. அதனால்தான்,

'தமிழைக் கெடுத்த பாவிகள், தமிழரே அன்றிப் பிறர் அல்லர்' என்றார் **தனித்தமிழ்க் காவலர் மறைமலையடிகள்!**

"தமிழைப் போல் உயர்ந்தமொழி தரணியெங்கும் கண்டதில்லை
*தமிழனைப் போல் மொழிக் கொலையில் தலைசிறந்தார் எவருமில்லை"*

என்றார் **தமிழ்த்தென்றல் திரு.வி.க.**

உயிரெழுத்து, மெய்யெழுத்து ஆகியவை யாம் கூறிய இவ்வளவினும் மிகுந்தும் (அளபெடை) ஒலிக்கலாம்! இசைபாடும் போது! அது யாழ்நூலில் (நரம்பின் மறை) அறிய வேண்டியது என்றார் (33). இவ்வாறே இறைமை வழிபாட்டுக்குரிய தேவபாணி போல்வன அந்தணர் மறையில்

காணவேண்டியதாம் (102) அதனை யாம் சொன்னேம் அல்லேம் என்கிறார். மேலும் இயற்றமிழின் எழுத்தொலி,

"இசையில் திரிதல் நிலைஇய பண்பே" *(141)*

என்கிறார். தொகைமரபில்,

"மெய்த்தலைப் பட்ட வழக்கொடு சிவணி
ஒத்தவை உரிய புணர்மொழி நிலையே"

எனக் கால - இட - சூழல் - வழக்குகளை ஏற்கக் கூறுகிறார். (171)

'உணரக் கூறிய புணரியல் மருங்கில்
கண்டு செயற் குரியவை கண்ணினர் கொளலே"

எனப் புள்ளி மயங்கியலில் புகல்கிறார் (403)

எழுத்ததிகார நிறைவில்,

"கிளந்த அல்ல செய்யுளில் திரிநவும்
வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்
விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்
வழங்கியல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்
நன்மதி நாட்டத் தென்மனார் புலவர்"

எனச் செய்யுள் வழக்கு மக்கள் வழக்கு ஆகியவற்றில் கூறியன வேறுபடத் தோன்றினும் கூறியது கொண்டு அவற்றை மரபியல் மாறாது போற்றுக என்கிறார். (483)

வேற்றுமை மயங்கியலில்,

"கிளந்த அல்ல வேறுபிற தோன்றினும்
கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே"

என ஒப்பிலாக் காப்புச் செய்கிறார் (602). இதனையே, இடையியலிலும் வழி மொழிகின்றார் (781)

உரிச் சொற்களை விரித்துப் பொருளுடன் கூறி நிறைவில்,

"அன்ன பிறவும் கிளந்தன அல்ல
பன்முறை யானும் பரந்தன வருஉம்
உரிச்சொல் எல்லாம் பொருட்குறை கூட்ட
இயன்ற மருங்கின் இனைத்தென அறியும்
வரம்பு தமக் கின்மையின் வழிநனி கடைப்பிடித்து
ஓம்படை ஆணையில் கிளந்தவற் றியலால்
பாங்குற உணர்தல் என்மனார் புலவர்"

என்கிறார்! புதுவெள்ள வரவை எவ்வளவு பூரிப்போடு வரவேற்று மொழி வளம் சிறக்க விரும்புகிறார் ஆசிரியர் தொல்காப்பியர் என்பது கூறிய இவற்றால் தெளிவாக விளங்கும்.

"மக்கள் நுதலிய அகனைந் திணையும்
சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்" (1000)

"புறத்திணை மருங்கில் பொருந்தின் அல்லது
அகத்திணை மருங்கில் அளவுதல் இலவே" (1001)

என்னும் ஆணைமொழிகள் சங்க இலக்கியப் பரப்பாம் 2381 பாடல்களிலும் போற்றப்பட்டனவே!

தலைவன் தலைவி தோழன் தோழி செவிலி நற்றாய் கண்டோர் பாணர் என்னும் பொதுமைச் சுட்டை அன்றிப் பெயர்ச்சுட்டு உண்டா?

நெடுநல்வாடையில் 'வேம்பு தலை யாத்த' வேல் என்பதால் பாண்டியன் மாலை குறிக்கப்படுதலால் அகப்பாட்டு ஆகாது எனத் தள்ளப்பட்டதே! மரபு போற்றிய மாண்பு தானே இது!

பேரறிஞர் பெர்னாட்சா, "என்னைப் பின்னுக்குத் தள்ளும் எழுத்தாளர் வரவை நோக்குகிறேன்" என்பதுபோல்,

"செய்யுள் மருங்கின் மெய்பெற நாடி
இழைத்த இலக்கணம் பிழைத்தன போல
வருவஉள எனினும் வந்தவற் றியலான்
திரிபின்றி முடித்தல் தெள்ளியோர் கடனே"

செய்யுளியல் நிறைவில் கூறுகிறார் (1499)

"குரங்கின் ஏற்றினைக் கடுவன் என்றலும்
மரம்பயில் கூகையைக் கோட்டான் என்றலும்
செவ்வாய்க் கிளியைத் தத்தை என்றலும்
வெவ்வாய் வெருகினைப் பூசை என்றலும்
குதிரையுள் ஆணினைச் சேவல் என்றலும்
இருள்நிறப் பன்றியை ஏனம் என்றலும்
எருமையுள் ஆணினைக் கண்டி என்றலும்
முடிய வந்த அவ்வழக் குண்மையின்
கடிய லாகா கடனறிந் தோர்க்கே"

என மரபியலில் கூறும் மருஉ முடிபுகள் (1568) முற்றிலும் ஒழிந்தன அல்ல! சில பெயர்கள் இன்றும் வழக்கில் உள. எ-டு:

"முட்புற முதுகனி பெற்ற கடுவன்
துய்த்தலை மந்தியைக் கையிடூஉப் பயிரும்" (புறம்.158)

"பனிவரை நிவந்த பாசிலைப் பலவின்
கனிகவர்ந் துண்ட கருவிரற் கடுவன்
செம்முக மந்தியொடு சிறந்துசேண் விளங்கி" (புறம்.200)

கூகையைக் கோட்டான் என்பது இன்றும் மக்கள் வழக்கில் இருந்து வராமல் இல்லை. கோட்டில் (மரக்கிளையில்) வாழும் கூகை.

தத்தித் தத்திச் செல்லும் கிளிக்குத் **தத்தை** என்பது பெயர்

"இன்னஞ் சுகமிலை என்றத்தையோதும் இளம் தத்தையே" (மறைசை. 7)

**- கதிரை வேலர், தமிழ்ச் சொல் அகராதி.1212**

**'தத்தம்மா'** என்பது மலரும் மாலையும்.

**தத்துக்கிளி** என்பது விட்டில்; பச்சை நிறத்தது. மக்கள் வழக்கு. **பூசை** - பூனை மக்கள் வழக்கில் **பூச்சை**; ஏதாவது ஒன்றைத் தின்றதும் உடன் கால்களால் முகத்தைத் தடவலால் பூசை! ஒ.நோ: ஈயம் பூசுதல்; வாய் பூசுதல் - வாயைக் கழுவித் துடைத்தல். அவ்வாறு இறையுறை சிலையை நீர்விட்டுக் கழுவித் துடைத்தலே பூசனை! வண்ணந் தடவப் பயன்படுத்துவது பூச்சு மட்டை. கட்டடத்தின் சுவரைப்பூசுதல்; பூச்சு வேலை! திருநீறு பூசுதல் ; திருநீறு பூசிய துறவி பூச்சாண்டி; இரப்பவனும் அச்சமூட்டுபவனும் பூச்சாண்டி.

அஞ்சத்தக்க தோற்றமுடையதும் ஊருள்வந்து கோழியைப் பற்றிச் செல்வதுமாம் காட்டுப்பூனையை 'வெருகு' என்றல் இக்காலத்தும் வழக்கில் உள்ளதே. வெருகுப்பூனை என்பர் அதனை.

**ஏனம்** என்பது பன்றி; கருநிறத்தது என்பது பொருள்; ஏனல் - கருந்தினை;

"வாகைப் பூவின் அன்ன
வளை மருப்பு ஏனம்" பெரும்பாண், (109-110)

"இருள் துணிந்தன்ன ஏனம்" மலைபடு. (247)

குதிரையின் ஆணினைச் **'சேவல்'** என்றதும்

எருமையுள் ஆணினைக் **'கண்டி'** என்றதும் வழக்கில வாயின.

ஆண்கோழி, ஆண்பறவை, ஆண் வண்டு சேவல் எனப்படல் இலக்கிய வழக்கில் உண்டு. இவற்றுள் கோழிச் சேவல் இருவகை வழக்குகளிலும் பெருக்கமாக உண்டு.

கண்டி என்பதோ இருபது பறை கொண்ட முகத்தலளவைப் பெயர், உருத்திராக்கம், ஒரணிகலம், ஓர் ஊர்ப்பெயர், ஓர் ஏவல் எனப் பிற பொருள் கொண்ட சொல்லாயிற்று.

அந்நாள் தலைவன், தலைவி, இந்நாள் அவைத்தலைமை, கட்சித்தலைமை முதலியவற்றுக்கு ஆயிற்று.

அந்நாள் கிழவன், கிழத்தியர் அகவை,

**"அவனும் தான் ஈரெட் டாண்டகவையான்"**

**அவளும் தான் ஈராறு ஆண்ட கவையாள்.**

எனக் கோவல கண்ணகியர் மணவுரிமையர் (கிழமை - உரிமை) ஆதலை இளங்கோவடிகள் குறித்தார். இந்நாள் மணமக்களைக் கிழவன் கிழத்தி எனலாமா?

"செல்லான் கிழவன் இருப்பின் நிலம் புலந்து
இல்லாளின் ஊடி விடும்"

என நிலவுரிமை உழவனைக் குறித்தார் திருவள்ளுவர்.

இன்றும் *நிலக்கிழார், பெருநிலக்கிழார்* என்னும் நிலவுடைமை குறிக்கும் 'கிழார்' வழக்கில் உண்டு.

கோவூர் கிழார், ஆவூர் கிழார் முதலாகக் கிழார்கள் வழங்கிய தமிழ்க்கொடை அளப்பில!

கோவூர் கிழாரின் அமைதிப்பணி, இற்றை ஒன்றிய நாடுகள் அமைப்பும் செய்யாத, செயற்கரிய பணி!

அரிசில்கிழார் அமைச்சுப்பணி பூண்டமை அருமைமிக்கது.

**மாண்ட என் மனைவி என்பது, மாண்புப் பண்புகள் அமைந்த என்**
**மனைவி என்னும் பொருளது!** (புறம். 191)

அதனைப் படித்த புலமையர் ஒருவர், ஓர் அமைச்சரை,

**"மாண்ட அமைச்சர் அவர்களே"**

என்று சொல்லி மேடையிலே, 'வாங்கிக் கட்டிக் கொண்டார்,' புலமைப் பெருமான்! ஒரு கிழமையில் அமைச்சரும் அமைச்சுப் பணியில் இருந்து விலக்கப்பட்டார்! எப்படி இருக்கும்?

"காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்த கதை"தான் இது! இதனால்தான், மரபு காக்கும் தொல்காப்பியர்,

**"கடிசொல் இல்லை காலத்துப் படினே"** (935)

எனக் காலத்தொடு பொருந்தச் சொல்லைச் சொன்னால் - மேலும் இடத்தொடும் பொருந்தச் சொன்னால் - நீக்கத்தக்க சொல் என்பது இல்லை! புதிய சொல் பொருந்தத் தோன்றினாலும் போற்றிக் கொள்ளல் வேண்டும்! மொழி மரபு மாறாமை எந்நிலையிலும் காக்கப்படுதலே கட்டாயமானது என்கிறார்!

**- தொடர்வோம்.**

# "குறுந்தொகைப் பாடல்களின் பொருள் கட்டமைப்பு"

முனைவர் **மு.மணிவேல்**
தகைசால் பேராசிரியர்,
தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

சங்க இலக்கிய நூல்களில் காணலாகும் பாடல்களில் காதற் பொருண்மையுடைய அகப்பாடல்கள் 1862. மூன்றாம் சங்கத்துப் பாடப்பெற்றனவாகக் கூறப்பெறும் இப்பாடல்களை நானூறுக்கும் மேற்பட்ட புலவர்கள் பாடியுள்ளனர். இப்புலவர்கள் தம் பாடல்களுக்குத் தேர்ந்து கொண்ட பாவடிவங்கள் ஆசிரியப்பா, கலிப்பா, பரிபாட்டு என்பன. பெரும்பான்மையான சங்கப்பாடல்களுக்கு அமைந்த மூன்று பாவடிவங்களிலும் பாடல்கள் பாடிய ஒரே புலவர் நல்லந்துவனார். இம்மூன்று வடிவங்களிலும் பெரியபாடல்களும் சிறிய பாடல்களும் பாடப்பெற்றுள்ளன.

சங்கப்பாடல்கள் பெரும்பான்மையும் முன்னிலைக் கூற்றில் அமைகின்றன. ஒருவர் எதிர்நிற்கும் ஒருவர்க்குக் கூறுவது; ஒருவர் தன் நெஞ்சினை முன்னிலைப்படுத்திக் கூறுவது என்ற வகையில் பாடப் பெற்றுள்ளன. சங்கப்பாடல்களில் பெரிதும் பயின்ற ஆசிரியப்பா அகவல் ஓசை உடையது; படுத்தல் ஓசையால் ஆனது. மெல்லப்பேசும் அகப்பாட்டுச் செய்திக்கு ஏற்றது.

பெரியதும் சிறியதுமான சங்க அகப்பாடல்களில் அமையும் பொருட்கூறுகள், உள்கட்டமைப்பு, பொருட்புலப்படுத்துதல், பாடியோர் தனித்திறன், பாடல்களுக்கிடையே பொருள் உணர்த்துதலில் பொதுத்தன்மை போன்றவற்றைப் பாடல்களை நுணுகி ஆராயும் போது அறியலாம்.

அகப்பாடல்களுக்கு உரியதாகக் கூறப்படும் முதல், கரு, உரிப்பொருள், ஆகிய மூன்றும் எல்லாப் பாடல்களிலும் அமைந்திடுவதில்லை. மூன்றும், இரண்டும், ஒன்றும் என்ற வகையில் திணைப் பொருள்கள் சங்க அகப்பாடல்களில் அமைந்திருக்கின்றன. முப்பொருளில் உரிப்பொருளாவது பாடல்களில் அமைய வேண்டும். உரிப்பொருளும்கூட வெளிப்படையாக அமையாத பாடல்களும் சங்க இலக்கியங்களில் உள்ளன.

*"ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து*
*அளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை*
*இறையுற ஓங்கிய நெறியல் மராஅத்த*
*பிள்ளை உள்வாய்ச் செரீஇய*
*இரைகொண் டமையின் விரையுமாற் செலவே"* (குறுந்.92)

என்ற பாடலின் பொருட்கட்டமைப்பு காட்டத்தக்கது. 'காலைப் பொழுதில் இரை தேடுவதற்காகச் சென்ற பறவை ஞாயிறு மறையும் மாலைப்பொழுதில், தேடிய இரையை, உயர்ந்த மாமரத்தில் இருக்கும் தன் குஞ்சுகளுக்கு ஊட்டுவதற்காக விரைந்து வரும் என்பது தாமோதனார் என்னும் புலவர் பாடிய குறுந்தொகைப் பாடற் செய்தியாகும். இப்பாடலில் முதற்பொருள், கருப்பொருள் என்பன சுட்டப்படாததோடு உரிப்பொருளும் வெளிப்படையாக இல்லை. 'பொருள் தேடுவதற்காகப் பிரிந்த தலைவன் உரிய பொழுதில் வாராமையால் தலைவி, காமமிக்க கழிபடர் கிளவியாய் பொழுது கண்டு கூறியது எனத் துறைக்குறிப்பு பெற்றுள்ள இப்பாடலில் உரிப்பொருள் இறைச்சிப் பொருளாகக் குறிப்பாகக் கூறப்பட்டுள்ளது. பிரிந்த பறவை வந்தது; பிரிந்த தலைவன் வரவில்லை என்பது கருத்து. இரை கொண்டமையால் பறவை மீண்டு வந்தது. பொருள் தேடிப் பெறாமையால் தலைவன் வரவில்லை என்பதும் இப்பாடலில் குறித்த கருத்தாகும். இரை தேடுவதற்காக அகன்ற வானத்து நீண்டவழிச் செல்லும் பறவையும் இரங்கத்தக்கது. பிரிந்து தனித்திருக்கும் தலைவியும் இரங்கத்தக்கவள் என்பதும் இப்பாடலில் குறிக்கப்பட்டதாகக் கருதலாம். சங்க அகப்பாடல்களில் பொருள் முடிவு (உரிப்பொருள்) பெரும்பான்மையும் பாடல்களின் இறுதியில் அமையும். இப்பாடலில் பின்னிரண்டு அடிகளில் உரிப்பொருளாகிய பிரிவாற்றாமை கூறப்பெற்றுள்ளமை அறியத்தக்கது.

*"வினையே ஆடவர்க்கு உயிரே, வாணுதல்*
*மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்என*
*நமக்குரைத் தோரும் தாமே*
*அழாஅல் தோழி அழுங்குவர் செலவே" (குறுந்.135)*

என்பது பாலை பாடிய பெருங்கடுங்கோ பாடியது. இப்பாடல் தோழிக்குக் கூறுவதாக அமைந்தது. தலைவன் மிகவும் மனம் வேறுபட்ட தலைவிக்குத் தலைவன் நின்னைப் பிரியான்' எனக்கூறி ஆற்றுவித்தது. செலவழுங்குவித்தல் என்னும் பாலைத்திணைக்குரிய உரிப்பொருள் அமைந்த பாடல் இது. முதற்பொருள், கருப்பொருள் குறிக்கப்படாத பாடல்.

மேற்குறித்த பாடலில் செலவழுங்குவிக்கும் செய்தி பாடலின் இறுதியில், 'அழுங்குவர் செலவே' என அமைந்துள்ளது. 'அழாஅல் தோழி' என்னும் ஆற்றுவிக்கும் செய்தியும் அப்பாடலடியிலேயே உள்ளது. நான்கடிப் பாடலாகிய இதனைக் கீழ்க்கண்டவாறு வாக்கிய அமைப்பிற்குரியதாகப் பிரிக்கலாம்.

1. வினையே ஆடவர்க்கு உயிர்
2. மகளிர்க்கு ஆடவர் உயிர்
3. நமக்குரைத்தோரும் அவர் (தாமே)
4. அழாஅல் தோழி
5. அழுங்குவர் செலவு

இவற்றுள் வினை ஆடவர்க்கு உயிர் என்றவர் போல, இரண்டாவது பாடலடியில், 'ஆடவர் மகளிர்க்கு உயிர்' என்று அமைந்திருத்தல் வேண்டும். ஆயின் மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் எனப் பாடியதன் சிறப்பினை அறிதல் வேண்டும். மகளிர் மனையிடத்தே இருப்பவர்; புறம் போகாதவர் என்பதைக்குறிக்க 'மனையுறை மகளிர்' எனப் பாடப்பெற்றது என்றும், முதலடியில் முதற்சொல் 'வினை' எனத் தொடங்கும் சொல் ஆதலின் அதற்கு எதுகையாக இரண்டாமடியில் 'மனை' என்னும் சொல் தொடக்கச் சொல்லாக அமைந்தது என்றும் கருதலாம். 'வாணுதல்' என்பது பாடலில் பொருட்தொடர்பிற்குத் தேவையற்றதெனினும் தலைவியின் இளமை, நலம் குறிக்கவும், ஆசிரியப்பாவின் அமைப்பிற்கான சீர்ச்சொல்லாகவும் அமைந்தது எனக் கூறலாம். தலைவன் முன்பொருநாளில் கூறியதும் தோழி கூற்றில் அவளின் சொற்களில் இப்பாடலில் கூறப்பட்டுள்ளது. இதனால் சங்கப்பாடல்களில் பலர் கூற்று செய்திகள் ஒருவர் கூற்றில் கூறப்படும் என்பது அறியத்தக்கதாகும். 'அழுங்குவர் செலவு' என்றாலும் தலைவன் பின்னர் பிரிவான் என்பது, வினையே ஆடவர்க்கு உயிர் என்றதனால் புலப்படுத்தப்பட்டது என அறியலாம். இதனால்தான் தொல்காப்பியர்,

*"செலவிடை அழுங்குதல் செல்லாமை யன்றே*
*வன்பொறை குறித்த தவிர்ச்சிய தாகும்"* (தொல்.பொருள்.185)

என்றார் எனத் தெரியலாம்.

*"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று*
*நீரினும் ஆரள வின்றே சாரல்*
*கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு*
*பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"* (குறுந்.3)

என்னும் தேவகுலத்தார் பாடிய இப்பாடல் தலைவனின் இயல்புகளைத் தோழி பழிக்க, தலைவி மறுத்துத் தலைவனின் அன்பின் சிறப்பைக் கூறுவதாக அமைந்ததாகும். இப்பாடல் முதல், கரு, உரி என்னும் முப்பொருளும் அமைந்த பாடல். பாடலின் இறுதியில் அமைந்த இரண்டு சீர்ச்சொற்களும் பாடலின் முதலடியில் முன்னே கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளத்தக்கவை.

இப்பாடலில் செய்திகள் பின்வருமாறு இடைநிறுத்திக் கூறப்பட்டுள்ளன.

1. நிலத்தினும் பெரிது
2. வானினும் உயர்ந்தன்று (உயர்ந்தது)
3. நீரினும் ஆரளவின்று (*ஆழமானது*)
4. சாரல், கருங்கோல் குறிஞ்சிப்பூக் கொண்டு பெருந்தேன் இழைக்கும் நாடனது நட்பு'

முதலிரண்டு அடிகள் மோனையிலும் பின்னிரண்டு அடிகள் எதுகையிலும் தொடங்குகின்றன. எச்சமாக அமையும் வாக்கிய அமைவில் முன்னிரண்டும் இரண்டு சீர்களில் அமைய, பின் தொடரும் மூன்றாவது மூன்று சீர்களில்

அமைகின்றமை ஆசிரியப்பாவின் அடிச்சீர் அமைவுகளை நிறைவு செய்வதற்காக எனக் கருதலாம். 'கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பு' என்றதனால் தலைவன், தலைவி இருவரின் காதல் பல்லாண்டுகளுக்கு மேலான 'பயிலியது கெழீஇய நட்பு' எனக் கூறப்பட்டது என்பதாகத் தெரியலாம்.

*"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி*
*காமஞ் செப்பாது கண்டது மொழிமோ,*
*பயிலியது கெழிஇய நட்பின், மயிலியல்*
*செறியெயிற்று அரிவை கூந்தலின்*
*நறியவும் உளவோ நீயறியும் பூவே"* (குறுந்.2)

என்ற இறையனார் பாடியதாக அமைந்த இப்பாடல் புராணத் தொடர்புடையதாகக் கூறப்படும். தலைவன் தலைவியின் நலம் பாராட்டுதலாகச் செய்தியமைந்த பாடல் இது. இப்பாடலில், தும்பி, மொழிமோ, அரிவை கூந்தலின் நறியவும் உளவோ நீயறியும் பூவே' என்பன மட்டும் குறித்த பொருளை உணர்த்தப் போதுமானவை. தலைவியின் கூந்தல் நலம் மட்டும் பாராட்டும் பாடலன்று இது. அவனது காதலின் பெருமை, மயிலின் சாயல், அழகிய பல் வரிசை ஆகியவற்றையும் பாராட்டும் பாடல் தலைவியின் நலம் பற்றித் தமக்குண்டான கருத்தையும் தலைவன் புலப்படுத்துகிறான். பலநாள் பூவோடு பழகியது தும்பி; பலநாள் பூவையோடு பழகியவன் தலைவன்; பூ இல்லாத கூந்தலில் மொய்த்தது தும்பி என்னும் செய்திகள் பலவும் இப்பாடல்வழித் தெரியத்தக்கன. இப்பாடலில் அமைந்த வாக்கிய நிறுத்தங்கள், முன்னைய பாடல்களினின்றும் வேறுபட்டு அமைந்திருத்தலைப் பாடலைப் படிக்கும்போது உணரலாம்.

*"யாயும் யாயும் யாரா கியரோ*
*எந்தையும் நுந்தையும் எம்முறைக்கேளிர்*
*யானும் நீயும் எவ்வழி அறிதும்*
*செம்புலப் பெயல்நீர் போல*
*அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே"* (குறுந்.40)

என்னும் தலைவன் கூற்றில் அமைந்த இப்பாடல், காதலர்களின் 'பாலதாணையிலான' உள்ளப் புணர்ச்சியைக் கூறுவது. நான்கு வாக்கிய உள்ளமைப்புக்களைக் கொண்ட இப்பாடல் உரிப்பொருள் மட்டுமே கொண்டமைந்தது. அவ்வுரிப் பொருளும் இறுதி இரண்டு அடிகளில் உவமை மூலம் உரைக்கப்பட்டுள்ளது. முன்னுள்ள மூன்று பாடலடிகளும் உரிப்பொருளுக்கு எடுப்பும் தொடுப்புமாய் அமைந்தவை.

*"அரும்பொருள் செய்வினை தப்பற்கு முரித்தே,*
*பெருந்தோள் அரிவை தகைத்தற்கு முரியள்,*
*செல்லா யாயின் நன்றே,*
*மெல்லம் புலம்ப இவளழப் பிரிந்தே"* (ஐங்.302)

என்னும் இப்பாடல், பொருள் காரணமாகப் பிரியக் கருதும் தலைவனைத் தோழி செலவழுங்குவித்தது கூறும் ஓதலாந்தையார் பாடிய ஐங்குறுநூற்றுப் பாடலாகும். பாலைத் திணைக்குரிய உரிப்பொருள் மட்டும் அமைந்த இப்பாடலில் 'மெல்லம் புலம்ப' என்றதனால் தலைவன் நெய்தல் நிலத்தவனாகக் குறிக்கப் பெற்றுள்ளான். 'உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே' என்னும் தொல்காப்பிய இலக்கண அமைவிற்குச் சான்றாக இப்பாடலைக் கொள்ளலாம். இறுதி இரண்டு அடிகளில் உரிப்பொருள் கூறும் இப்பாடலில் செய்தி அமைவிற்கு ஏற்ப அப்பாடலடிகள்,

*"மெல்லம் புலம்ப இவளைப் பிரிந்தே*
*செல்லா யாயின் நன்றே"*

என்றிருக்க வேண்டும். ஈற்றயலடி முச்சீர்களிலும், ஏனையவை நாற்சீர்களிலும் ஆசிரியப்பா அடைவதற்குரியது. ஆதலின் முச்சீர் அடி முன்னும் நாற்சீர் அடி பின்னும் இப்பாடலில் அமைந்தன.

*"செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்*
*வல்வரவு வாழ்வார்க்கு உரை"* *(குறள். 1151)*

என்ற குறட்பாவின் கருத்து இப்பாடற் கருத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கத் தக்கதாகும்.

*"நன்றே காதலர் சென்ற ஆறே*
*மறியுடைய மான்பிணை யுகளத்*
*தண்பெயல் பொழிந்த இன்பமு முடைத்தே"* *(ஐங். 434)*

என்னும் தலைவன் பிரிவில் தலைவியை ஆற்றுவிக்கும் தோழி கூற்றில் அமைந்த மிகச்சிறிய மூன்றடிப் பாடலாகிய இதில் கருப்பொருளும் உரிப்பொருளும் அமைந்துள்ளன. மேலே காட்டிய ஏனைய பாடல்களில் போலல்லாது இப்பாடலில் 'நன்றே காதலர் சென்ற ஆறு' (வழி) என முதலடியில் உரிப்பொருள் கூறப்பெற்றுள்ளது; செய்தியின் முடிவு பாடலின் தொடக்கத்தில் அமைகின்றது.

நற்றிணை, அகநானூறு, கலித்தொகை, பரிபாடல் நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு ஆகியவற்றின் பெரும்பாடல் கட்டமைப்பினை ஆராய்ந்தால் பாடல்களின் பொருள் கட்டமைப்பு, புலவர்தம் பாடுதிறம், இலக்கண வரையறை செய்ததற்கான பொருள் அமைவுகள் குறித்த இன்னும் விரிவான செய்திகளைப் பெறமுடியும்.

# திருமுறைகளில் வாழ்க்கை முறைகள் (மூவர் தேவாரங்களில் வாழ்வியல் நெறிகள்)

முனைவர் **உ.கருப்பத்தேவன்,**
துறைத் தலைவர் (பொ)
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை.

## சென்ற இதழின் தொடர்ச்சி

### அருள்நெறியும் அறநெறியும்

தமிழகத்தில் தோன்றிய அருளாளர்கள் பிறர்க்குத் தீங்கு செய்யாத அறநெறிப்பட்ட வாழ்க்கையையே போற்றினர். உள்ளத்தால் ஒருவருக்கும் கெடுதி நினையாதிருத்தல், மற்றவர்கள் மனம் வருந்துமாறு கடுஞ்சொற்களைக் கூறாதிருத்தல், செயலாலும் பிறர்க்குச் சிறிதும் தீங்கு செய்யாதிருத்தல் என்பனவே அருளாளர்கள் போற்றிய அறநெறிப்பட்ட வாழ்க்கை முறையாகும்.

உண்மையான இறைநம்பிக்கையாளர்கள் எந்நிலையிலும் பிறர்க்குத் தீங்கு செய்ய நினைக்க மாட்டார்கள்; இதனால்தான் நாவுக்கரசர், இறைவன் எங்கும் இருக்கின்றான்; அவன் ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்திலும் உறைகின்றான்; அவன் ஜோதிவடிவினன்; ஒப்பற்ற ஒளிவடிவின்; ஆதலால் அவனறியாமல் ஒன்றையும் செய்துவிட இயலாது.' ஆதலால் தீமைக்கு அஞ்சவேண்டும் என்பதைப் பின்வரும் தேவாரப்பாடலில் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

*"நீதியால் வாழ மாட்டேன்; நித்தலும் தூயன் அல்லேன்;*
*ஓதியும் உணர மாட்டேன்; உன்னை உள்வைக்க மாட்டேன்*
*சோதியே! சுடரே! உன்தன் தூமலர்ப் பாதம் காண்பான்;*
*ஆதியே அலந்து போனேன்; அதிகை வீரட் டனாரே"*

(திருநாவுக்கரசர், திருவதிகை வீரட்டானம் தேவாரப்பதிகம், *பா.எண்.2)*

நீதியோடு வாழவேண்டும்; நாள்தோறும் ஒழுக்கம் தவறாமல் நடக்க வேண்டும்; ஓதிய நூல்களின் உண்மைகளை உணரவேண்டும்; கடவுளைக் கருத்திலே காணவேண்டும்; கடவுளே அளவிடற்கரிய சோதி; அவன் ஒளிவடிவினன் என்பதை அறியவேண்டும்; இதுவே மக்கள் கடமை எனத் திருநாவுக்கரசர் மக்கள் வாழ்வாங்கு வாழவேண்டிய அறநெறிகளை அருள்நெறிகளை சமுதாய ஒழுக்க நெறிகளை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

தாயுமானவருக்கும் வள்ளலாருக்கும் முன்னர் இறைவனை ஒளிவடிவில் கண்ட பெருமைக்குரியவராகத் திருநாவுக்கரசர் திகழ்ந்து வருகின்றார்.

### அன்புநெறியே சிவநெறி

இறையடியார்கள் அனைவரும் ஒரே குலம்; சிவபக்தர்கள் அனைவரும் ஒன்றுபட்டு வாழவேண்டும்; அவர்களுக்குள் பிறப்பினால் பேதம் கொள்ளக்

கூடாது; அன்புநெறியே; அதுவே சிவநெறி என்பது நாவுக்கரசர் கொள்கையாகும். நாவுக்கரசர் வாழ்ந்த கி.பி. ஏழாம் நூற்றாண்டுத் தமிழகத்தில் சாதிபேதங்கள் நிறைந்திருந்தன. பிறப்பினால் உயர்வு தாழ்வுகள் பாராட்டப் பட்டன. இந்தச் சமுதாய ஏற்றத் தாழ்வுகளைக் களையவே நாவுக்கரசர் விரும்பினார். சிவனுக்கு அடிமையான புலையனையும் வணங்க வேண்டும் என்பது அவரது வேண்டுகோள்.

நாவுக்கரசர் தொண்டை நாட்டில் பிறந்தவர். காஞ்சிபுரமே அவர் காலத்துத் தொண்டை நாட்டின் தலைநகரமாகும். அவர்காலத்துப் பல்லவ மன்னனான மகேந்திரவர்மன் சமணத்தைத் தழுவியவன்; சமணர்களை ஆதரித்தவன். சமணத்தைத் தழுவி, பின்னர் சைவத்தில் இணைந்த நாவுக்கரசரை மன்னன் ஆதரவோடு சமணர்கள் படாதபாடுபடுத்துகின்றனர். இவ்வாறு நாவுக்கரசரைத் துன்புறுத்தும் மகேந்திரவர்ம பல்லவனே இறுதியில் சைவத்திற்கு மாறுகின்றான். நாவுக்கரசரிடம் உபதேசம் பெற்றே அவன் சைவனாகின்றான். நாவுக்கரசரின் உள்ளத்து உறுதியும், பொறுமையும், அன்பும் பணிவும், தெய்வத் தீந்தமிழ்ப் பாடல்களும் பல்லவ மன்னன் மனத்தை மாற்றின.

உலக வாழ்க்கையின் நிலையாமையை மக்கட் சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டி, வாழ்க்கையின் நுண்பொருள் தத்துவத்தை நாவுக்கரசர் தேவாரப் பாடல்கள் விளக்கி நிற்கின்றன. சடங்குகளைவிடப் பக்தியே சிறந்தது என்பது நாவுக்கரசர் கொள்கையாகும்.

வெற்றுச் சடங்குகள் வேண்டாம்; சிவனைப் பாட்டிசைத்து வழிபட்டால் அவன் அடியார்க்கு இரங்கி அருள்செய்வான். இறைவன் பெருமைகளைத் தினம் பேசவேண்டும். சிவன் திருநாமமாகிய ஐந்தெழுத்தை ஓதிட வேண்டும். புனித நதிகளில் நீராடுதல், வழிபாடு இயற்றல், நோன்பிருத்தல், வேதம் ஓதுதல், உபதேசித்தல் முதலான செயல்களை இறையுணர்வு இல்லாமலும், அன்பில்லாமலும் வெளிப்பகட்டிற்காகச் சடங்காகச் செய்வது எவ்விதப் பயனையும் நல்காது; உள்ளமே இறைவன் உறையும் இடம் என்பதை நாவுக்கரசர் மிகத் தெளிவாக,

*"கங்கையாடில் என் காவிரியாடில் என்*
*கொங்கு தண்குமரித் துறையாடில் என்*
*ஓங்கு மாகடல் ஓதநீர் ஆடில்என்*
*எங்கும் ஈசன் எனாதவர்க் கில்லையே"*

*(நாவுக்கரசர், பாவநாகத் திருக்குறுந்தொகை, பா.எண்.9)*

எனவும்,

*"கோடி தீர்த்தங் கலந்து குறித்தவை*
*ஆடினாலும், அரனுக்கு அன்பில்லையேல்*
*ஓடு நீரினை யோட்டைக் குடத்தட்டி*
*மூடிவைத்திட்ட மூர்க்கனோ டொக்கும்."*

*(நாவுக்கரசர், பாவநாகத் திருக்குறுந்தொகை, பா.எண். 9)*

எனவும்,

*"வேதம் ஓதில்என் வேள்விகள் செய்யிலென்*
*நீதிநூல் பலநித்தம் பயிற்றிலென்*
*ஓதியங்கம் ஓராறும் உணரிலென்*
*ஈசனை யுள்கு வார்க்கன்றி யில்லையேல்"* (நாவுக்கரசர் தேவாரம், 5:99:4)

எனவும், நாம் செய்யக்கூடிய செயல்களில், இறையுணர்வு மேலிட வேண்டும்; சிவனை இமைப்பொழுதும் விட்டுவிலகாது நெஞ்சத்தில் இருத்தி வழிபடுவதே சாலச் சிறந்தது என்றும் வெளிப்படையாகக் குறிப்பிடுகின்றார்.

*"பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்*
*பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்*
*சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க வேண்டில்*
*சொல்லுகேன் கேள் நெஞ்சே துஞ்சாவண்ணம்*
*உற்றவரும் உறுதுணையும் நீயே யென்றும்*
*உன்னையல்லால் ஒருதெய்வம் உள்கேன் என்றும்*
*பற்றரவக் கச்சார்ந்த புனிதா என்றும்*
*பொழில் ஆரூரா என்றே போற்றாநில்லே"*

(நாவுக்கரசர் தேவாரம், 6:31:7)

என்று முக்தியடைவதற்கு இடையூறான ஆசை, பொறாமை, கோபம், வெறுப்பு ஆகியன நீங்கி உண்மை அறிவான சிவத்தை நாடி நலம் பெறலாம் என்று நாவுக்கரசர் உருக்கமான அறிவுரைகளைச் சமூகத்திற்கு விதைத்துச் சமூக சேவகர் ஆகின்றார்.

**சாத்திரமும் கோத்திரமும் வேண்டாம்**

'தாண்டகம்' என்பது ஒருவகைச் செய்யுளாகும். ஓரடியில் 24 எழுத்துக்கள் முதல் 26 எழுத்துக்கள் வரையில் அமைந்தது சந்தமாகும். 27 எழுத்துக்களும் அதற்கு மேலுமான எழுத்துக்கள் கொண்ட அடிகளைக் கொண்ட செய்யுளே தாண்டகமாகும். (யாப்பருங்கல விருத்தி, நூற்.95,44). நாவுக்கரசர் பாடியருளிய ஆறாம் திருமுறைப் பாடல்கள் அனைத்தும் தாண்டகமாகும். இவ்வாறு தாண்டகம் பாடிய நாவுக்கரசர் மக்கள் நன்முறையில் உணர்ந்து வாழ்வதற்கு "நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீ வா" (நாவுக்கரசர், திருத்தாண்டகம், பா.எண்.1) என எளிய சொற்களைக் கொண்டு அறவுரை கூறுகின்றார்.

*"சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்*
*கோத்திரமும் குலமும் கொண் டென்செய்வீர்"*

(நாவுக்கரசர், திருக்குறுந்தொகை, பா.எண்.3)

என வினாத் தொடுத்துச் சாத்திரமும் கோத்திரமும் குலமும் சமுதாயத்தில் வேண்டாம் என விடை கூறிச் சமுதாய மேம்பாட்டிற்காகப் பதிகம் பாடியுள்ளார். நாவுக்கரசரின் தேவாரப் பாடல்கள் சமுதாய மேம்பாட்டிற்கு உதவுவதாகவும், பொய்புரட்டு நிறைந்த வழிபாடுகளைச் சாடுவதாகவும், ஆன்மிக விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளன.

நாவுக்கரசர் சிவனை ஆண்டானாகவும் தம்மை அடிமையாகவும் ஏற்றுக் கிரியை நெறியில் தம் வழிபாட்டை மேற்கொண்டார். உழவாரப் பணிகளை மேற்கொண்டு தொண்டுப்பணியைச் செய்துவந்தார். சிவவழிபாட்டில் புலனடக்கத்தை வலியுறுத்தினார். அவர் சமய உலகில் சாதியத்தை வெறுத்தார். வடகத்தியர்களின் வேள்வித்தீ வழிபாட்டைச் சாடினார். பக்தியோடு அறநெறிகளையும் ஒழுக்கநெறிகளையும் வலியுறுத்திப் பாடிய நாயன்மார்களுள் நாவுக்கரசர் முதன்மையிடத்தைப் பெறுகின்றார்.

### கலப்பு மணமும் பலதார மணமும்

சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் என்னும் மூவருள் சுந்தரர் வரலாறு மட்டுமே பல சுவையான பகுதிகளைக் கொண்டதாகும். இவர் வரலாறு மக்களுக்குப் பல படிப்பினைகளை வழங்குகின்றது. மக்கள் வாழ்க்கைக்குச் சிறப்பான வழியைக் காட்டுகின்றது. சுந்தரர், உலக வாழ்க்கையின் நிலையாமையை அறிந்த பக்தர் ஆவார். ஆயினும் அவர் உலக வாழ்க்கையோடு ஒட்டி வாழ்ந்தவர். அவர் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் திருமணம் நடைபெற்றபோது சிவன், கிழவேதியராக வந்து சுந்தரருடைய முப்பாட்டனாரும் சுந்தரரும் அவரது குடும்பமும் தனக்கு அடிமை என்று வாதிட்டு ஓலைமுறியைக்காட்டி, திருவெண்ணெய் நல்லூர்க் கோயிலில் சுந்தரரைத் தடுத்தாட்கொண்டார். அப்பொழுது சிவனைத் துதித்துப் பல பதிகங்களைப் பாடியருளினார் சுந்தரர். சுந்தரர் வரலாற்றிலிருந்து அக்காலத்தில் தமிழகத்தில் மனிதனுக்கு மனிதன் அடிமையாகும் வழக்கம் இருந்தது என்பதை அறியமுடிகின்றது.

சுந்தரர் ஆதி சைவப்பிராமணர் குலத்தில் பிறந்தவர். ஆயினும் அவர் அக்காலத்தில் வாழ்ந்த சிற்றரசனான நரசிங்கமுனையரையர் என்னும் சிவபக்தர் வீட்டில் வளர்ந்தவர். பின்னர் சுந்தரர் பரவையார், சங்கிலியார் என்னும் இருபெண்களை மணந்துகொண்டு இல்லற வாழ்வின் இன்பத்தை இனிதே துய்த்தவர். இவர்களுள் பரவையார் கணிகையர் குலத்தவர்; சங்கிலியார் வேளாளர் குலத்தவர். இதனால் கி.பி. ஏழாம் நூற்றாண்டிலேயே தமிழகத்தில் சாதிபேதம் ஒழிவதற்கான முயற்சி நடைபெற்றது என்பதையும், கற்றவர் களுக்குள் சாதிபேதம் போற்றப்படவில்லை என்பதையும், கலப்புமணம் நடைபெற்றது என்பதையும் அறியமுடிகின்றது. அத்துடன் அக்காலத்தில் ஓர் ஆண்மகன், பல பெண்களை மணக்கும் பலதாரமுறையும் இருந்தது என்பதையும் தெளியமுடிகின்றது. சுந்தரர் வரலாறு,

(i) மனிதனுக்கு மனிதன் அடிமையாக இருந்த சமுதாய வழக்கம்

(ii) கலப்பு மணம்,

(iii) பலதார மணம்,

(iv) சாதிபேதத்தை ஒழித்தல்

முதலான சமுதாயச் சிந்தனைகளை உட்கொண்டிருப்பதும் சிந்தனைக்குரியது.

### சத்தியம் செய்தல்

அக்காலச் சமுதாய மக்களிடம் 'சத்தியம் செய்தல்' என்னும் வழக்கமும் காணப்பட்டது. சுந்தரர், திருவொற்றியூரில் சங்கிலியாரை மணக்கும்போது

அவரை எப்பொழுதும் விட்டுப் பிரிவதில்லை என்று சத்தியம் செய்து கொடுத்திருந்தார். அந்த வாக்குறுதியை மீறி அவர் சங்கிலியாரைப் பிரிந்து திருவாரூருக்குப் புறப்பட்டார். அப்பொழுது அவருடைய கண்பார்வை மங்கி விட்டது. அதனால் அவர் வருந்திப்பாடிய பாடல்கள் உள்ளத்தை உருக்குவன. இதனை அவர் திருவொற்றியூர்ப் பதிகத்தில்,

***"அகத்தில் பெண்டுகள் நானொன்று சொன்னால்***
***'அழையேல் குருடா' எனத் தரியேன்;***
***முகத்தில் கண்இழந்து எங்ஙனம் வாழ்கேன்!***
***முக்கணா! முறையோ! மறைஓதி!"***

**(சுந்தரர், திருவொற்றியூர்ப் பதிகம்)**

எனப்பாடியுள்ளார். வீட்டில் பெண்கள், கண்பார்வை இழந்த கணவன்மார்களை மதிக்கமாட்டார்கள் என்பது யதார்த்தமான உண்மையே. கண்பார்வையை இழந்து வருந்திய சுந்தரர் சிவனருளால் திருவெண்பாக்கம் என்னும் ஊரில் ஒரு ஊன்றுகோலினைப் பெற்றார்.

**உலகியல் உணர்ந்தவர் – சுந்தரர்**

சுந்தரர் இருபெண்களை மணந்து இல்லற இன்பத்தை வேண்டுமளவிற்கு முழுமையாக அனுபவித்து நுகர்ந்தவர். ஆயினும் இந்த இன்பத்தை நிலையானது என்று அவர் நம்பவில்லை. இவ்வுலக வாழ்க்கை நிலையற்றது; மனித வாழ்க்கை நிரந்தரமானதன்று; பிறந்தவர் இறப்பார்; இறந்தவர் பிறப்பார்; உலகின் அனைத்துப் பொருள்களுமே தோன்றிமறையும் இயல்புடையவை; இவ்வாறு உலக உயிர்களையும் பொருட்களையும் இயக்குபவன் இறைவனே; அவனை எப்பொழுதும் மறவாமல் உள்ளத்தில் இருத்துவதே ஈடேறும் வழி என்பதில் சுந்தரர் உறுதிகொண்டிருந்தார். இத்தகைய நிலையற்ற வாழ்க்கைச் சூழலிலிருந்து தப்பிக்கும் வழியைச் சிவனே தனக்குக் கூறவேண்டும் என்பதைச் சுந்தரர்,

***"நல்லாயில் செய்தார் நடந்தார் உடுத்தார்***
***நரைத்தார் இறந்தார் என்று நானிலத்தில்***
***சொல்லாய்க் கழிகின்றது அறிந்து அடியேன்***
***தொடர்ந்தேன் உய்யப் போவதுஓர் சூழல் சொல்லே"***

**(சுந்தரர் தேவாரம், ஏழாந்திருமுறை)**

என வேண்டிப் பாடியுள்ளார். இம்மண்ணுலக வாழ்க்கை நிலையற்றது. புலன் உணர்ச்சிகளுக்குத் தான் அடிமையாகாமல், அவைகள் தனக்கு அடிமையாக வேண்டும். இதற்குச் சிவனுடைய திருப்பாதங்களைச் சரணடைய வேண்டும்; சிவனே அருள்கூர்ந்து தனக்கு அவ்வழியைக் காட்ட வேண்டும் என்பதைச் சுந்தரர்,

***"வறிதே நிலையாதஇம் மண்ணுலகில்***
***நரனாக வகுத்தனை 'நான்நிலையேன்'***
***பொறிவாயில் இவ்ஐந்தனையும் அவியப்***

*பொருதுஉன் அடியேபுகும் சூழல் சொல்லே"*

*(சுந்தரர் தேவாரம், ஏழாந்திருமுறை)*

எனப்பாடுகின்றார். இவ்வாறு சிவனை வேண்டும் சுந்தரர், தான் பிறவியாகிய பெருங்கடலை நீந்திக் கரையேற வேண்டுமெனச் சிவனிடம் இறைஞ்சுகின்றார்.

*"மற்றேல் ஒரு பற்றிலன் எம்பெருமான்*
*வண்டார் குழலாள் மங்கை பங்கினனே!*
*அற்றார் பிறவிக்கடல் நீந்திஏறி அடியேன்*
*உய்யப்போவது ஓர் சூழல் சொல்லே"*

*(சுந்தரர் தேவாரம், ஏழாந்திருமுறை)*

இளமை நிலையற்றது; பிறப்பும் மாறிமாறி வருவது என்பதைச் சுந்தரர்,

*"ஓடுபுனல் கரையாம் இளமை*
*உறங்கி விழித்தால் ஒக்கும் இப்பிறவி;*
*வாடியிருந்து வருந்தல் செய்யாது அடியேன்,*
*உய்யப்போவது ஓர் சூழல் சொல்லே"*

*(சுந்தரர் தேவாரம், ஏழாந்திருமுறை)*

சுந்தரரின் இத்தேவாரப் பாடல்கள் திருநெல்வாயில் திருஅரத்துறைத் தேவாரத்தில் உள்ளவை. இப்பாடல்களில் சுந்தரர் உலக வாழ்க்கையின் இயல்புகளை நுணுக்கமாக விளக்கி, மண்ணுலக வாழ்க்கையின் நிலையற்ற தன்மையை எளிதாகப் புலப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**இறைவனே 'நல்வாழ்வின் வழிகாட்டி'**

சிவன், தன்னை நம்பினோரைக் கைவிடமாட்டான் என்பதில் சுந்தரர் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார். 'எல்லாம் வல்லவன்' சிவனாகிய இறைவன் ஒருவனே என நம்பிய சுந்தரர், சிவனே தன் வாழ்வின் வழிகாட்டி எனக் கருதினார். தன் செயல்கள் யாவும் இறைவன் திருவுள்ளக் குறிப்பின்படி நடப்பதாக அவர் உறுதியாக நம்பினார். இதனால்தான் அவர் தம் வாழ்க்கையில் வெற்றிபெற்றார். இழந்த கண்பார்வையைக்கூட மீண்டும் பெற்றார். இவ்வாறு தன் உள்ளத்தில் இருந்த நம்பிக்கையைச் சுந்தரர் தம் திருவாரூர்ப் பதிகத்தில்,

*"பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்*
*போகமும் திருவும் புணர்ப்பானைப்*
*பின்னையென் பிழை பொறுப்பானைப்*
*பிழையெலாம் தவிரப் பணிப்பானை*
*இன்னதன்மையன் என்றறிய ஒண்ணா*
*எம்மானை எளிவந்த பிரானை*
*அன்னம் வைகும்வயல் பழனத்து*
*அணிஆருரனை மறக்கலும் ஆமே"*

*(சுந்தரர் தேவாரம், ஏழாந்திருமுறை, திருவாரூர்ப் பதிகம், பா.எண்.1)*

எனப் பாடியுள்ளார். இதிலிருந்து சிவனே, மக்கள் நல்வாழ்வின் வழிகாட்டி என்பதை அறியமுடிகின்றது.

சிவனிடம் பக்திகொண்டவர்கள் உச்சரிக்க வேண்டிய மந்திரம் 'நமசிவாய' என்பதாகும். அவர்களுடைய பக்தியை வளர்க்கும் மந்திரம் இதுவேயாகும். சிவபக்தர்கள் மற்றும் சிவனடியார்களின் உள்ளங்களில் எப்பொழுதும் சிவனைக் குடிகொள்ளச் செய்யும் மந்திரம் இதுவே. இம்மந்திரத்தை உச்சரிக்கப் பழகிய சிவனடியார்களின் நாவில் எப்பொழுதும் இம்மந்திரம் ஒலித்துக்கொண்டேதான் இருக்கும். அவர்கள் சிவனை மறந்தாலும் அவர்களுடைய நாக்கு இம்மந்திரத்தை மறவாது. 'நான் வேறல்ல; சிவன் வேறல்ல; என் செயலாவது வேறொன்றும் இல்லை; எல்லாம் சிவன் செயல்தான்" என்ற நம்பிக்கையில் ஊறிப் போனவர்கள் நாவுகளில்தான் 'நமசிவாய' என்னும் மந்திரத்தொடர் ஒலித்துக் கொண்டிருக்கும்.

சிவனைத்தவிர வேறு பற்றும் உடைமையும் இல்லாதவர்கள் தாம் 'நமசிவாய' என்னும் மந்திரத்தை மறவாமல், ஓயாமல் சொல்லிக் கொண்டிருப்பார்கள். இவர்களே உண்மையான சிவபக்தர்கள் ஆவர். இவர்கள் எத்துன்பத்திற்கும் ஆட்படாமல் இன்புற்று வாழும் இயல்புடையவர்கள். இந்த மெய்ம்மையைச் சுந்தரர் திருப்பாண்டிக் கொடுமுடிப் பதிகத்தில் பின்வரும் பாடலில் நுட்பமாக எடுத்துக்காட்டித் தெளிவுபடுத்தியுள்ளார்.

*"மற்றுப் பற்றுஎனக்கு இன்றி நின்றிருப்*
*பாதமே மனம் பாவித்தேன்;*
*பெற்றலும் பிறந்தேன் இனிப்பிறவாத*
*தன்மை வந்து எய்தினேன்*
*கற்றவர் தொழுது ஏத்தும் சீர்க்*
*கரையூரில் பாண்டிக் கொடுமுடி*
*நற்றவா! உன்னை நான் மறக்கினும்*
*சொல்லும்நா நமச்சி வாயவே"*

*('சுந்தரர் தேவாரம், திருப்பாண்டிக் கொடுமுடிப் பதிகம், பா.எண். 1)*

இந்த உலகத்தில் எனக்கு வேறு எந்தப்பற்றும் இல்லை; எவ்வித ஆசையும் இல்லை; உன்னுடைய பாதத்தையே நான் என்னுள்ளத்திலே பற்றி நின்றேன். அதையே எப்பொழுதும், எக்காரியத்தைச் செய்யும்போதும் சிந்தித்துக்கொண்டே இருக்கின்றேன். இந்தப்பண்பை நான் பெற்ற பின்னர்தான் இந்த உலகில் மனிதப் பிறவி எடுத்ததன் பயனைப் பெற்றேன். உண்மையான மனிதப் பிறப்பாளன் ஆனேன். இனி மீண்டும் இந்த உலகத்தில் பிறந்து இறந்து தொல்லைப்படாத சிறந்த தன்மையையும் பெற்றேன். சிறந்த கரையூரில், திருப்பாண்டிக் கொடுமுடி என்னும் கோயிலில் குடிகொண்டிருக்கும் சிவனே, கற்றவர்கள் கண்டுபோற்றி வாழ்த்தி வணங்கும்படி அமர்ந்திருக்கின்றவனே; நற்றவக் கோலத்துடன் விளங்குகின்றவனே; உன்னை நான் மறந்தாலும் என் நாக்கு ஒருபோதும் மறந்து விடாது அது தானாகவே எப்பொழுதும் 'நமசிவாய' என்று சொல்லிக்கொண்டேதான் இருக்கும்.

இவ்வாறு சுந்தரர் தமது பக்திப் பெருக்கத்தை, சிவனை என்றும்

மறவாமல் இருக்கும் நிலையைத் திருப்பாண்டிக் கொடுமுடிப் பதிகப்பாடல்களில் எடுத்துக் கூறியுள்ளார். இப்பதிகப் பாடல்கள் சுந்தரரின் பண்பின் விளக்கமாகவும், சமயப் பற்றின் வெளிப்பாடாகவும் அமைந்திருக்கின்றன.

சுந்தரருக்கு முன்னர் சம்பந்தரும் நாவுக்கரசரும் 'நமசிவாய' மந்திரத்தின் பெருமைகளைத் தம் பாடல்களில் பாடியிருக்கின்றனர். இதனுடைய உட்பொருள் தத்துவ விளக்கம் மிகவும் ஆழமானது. தான் மறந்தாலும் தன்னுடைய நாக்கு 'நமசிவாய' என்னும் தொடரை உச்சரிப்பவர்களின் உள்ளம் உறுதியானது; அவர்கள் எதற்கும் அஞ்சமாட்டார்கள். தாம் கொண்ட கொள்கைகளில் நிலைத்து நிற்பார்கள். இந்த உண்மைகளைச் சமுதாயத்தில் வாழும் மக்கள் அனைவரும் உணர வேண்டும்; உணர்ந்து பின்பற்ற வேண்டும் என்பதற்காகவே தேவாரம் பாடிய மூவர் முதலிகளும் தம் பாடல்களில் வலியுறுத்திப் பாடியுள்ளனர்.

**தமிழ்ப் புலவர்களுக்கு வேண்டுகோள்**

பண்டைத் தமிழ்ப் புலவர்கள், பல பெரியமனிதர்களிடம் இல்லாத பண்புகளையும் அவர்களுக்கு இருப்பதாகச் சொல்லி அவர்களைப் புகழ்ந்து பாடியே, அவர்கள் மனமுவந்து கொடுக்கும் பொருள்களைக் கொண்டு தம் வாழ்க்கையை நடத்தியுள்ளனர். சுந்தரருக்குப் பழந்தமிழ்ப் புலவர்களின் வாழ்க்கை வரலாறு நன்றாகத் தெரியும். அவர் ஒரு வரலாற்றாசிரியராகவும் திகழ்ந்தவர். இதற்கு அவர் பாடிய திருத்தொண்டத் தொகைப் பாடல்களே சான்றாகும்.

தம்மைப் புகழ்ந்துபாடும் புலவர்களுக்குப் பொருள் கொடுத்து ஆதரித்த கொடை வள்ளல்கள் பண்டைய தமிழகத்தில் இருந்தனர் என்பது உண்மையே; ஆயினும் சுந்தரர் காலத்தில் புலவர்களைப் புரந்தரும் கொடை வள்ளல்கள் குறைந்துவிட்டனர். ஆயினும் தமிழ்ப் புலவர்கள் பலர் பழம் மரபுகளை விடாமல் பணம்படைத்தோரைப் பாடியும் அவர்கள்தம் பாடல்களுக்குத் தகுந்த பலன் கிடைக்காமையால் வாடி வறுமையுற்றும் அலைந்தனர். புலவர்கள் இவ்வாறு வறுமையில் துன்புறுவதைக் கண்ட சுந்தரர் அவர்களுக்கு அறிவுரை கூறும் வகையில் திருப்புகலூர்ப் பதிகத்தைப் பாடியுள்ளார். இப்பதிகத்தின் பத்துப்பாடல்களிலும் 'வீணாக மக்களைப் புகழ்ந்து பாடித்திரிய வேண்டாம்; இதனால் நீங்கள் நினைக்கும் பயனைப்பெற முடியாது. ஒருக்கால் கொடை வள்ளல்கள் உங்களை ஆதரித்து உதவினாலும் அந்த உதவி இம்மைக்கு மட்டுமே பயன்தரும். அவர்களைப் பாடுவதால் மறுமைப்பயனை அடைய முடியாது. இறைவனைப் பாடினால் இருமைப் பயனையும் அடையலாம்' என்னும் சிந்தனைகள் நிறைந்த அறிவுரைகளை வழங்கியுள்ளார்.

இறைவன் திருவருளால் கணிகையர் குலத்தில் பிறந்த பரவையாரை மணந்தவர் சுந்தரர். அவர் சிவனைப் பாடியே சங்கிலியாரையும் மணந்தார். இவர்களுடன் சுந்தரர் சேர்ந்து இன்புற்று வாழ்வதற்கு உரிய பொன்னையும் பொருளையும் சிவன் அருளி உதவினான். இந்த உண்மையைச் சுந்தரர் தமிழ்ப் புலவர்களுக்குக் கூறுகின்றார். தன்னைப் போலவே தமிழ்ப் புலவர்களும் இன்புற்று வாழவேண்டும் என்பதே அவரது விருப்பமாகும்.

பணம் படைத்த செல்வந்தர்கள் புகழ்ச்சியை விரும்புகின்றவர்கள். ஆயினும் பாடி வந்த புலவர்கள் தமது விருப்பத்தையும் தேவைகளையும் தெரிவித்து விண்ணப்பித்தாலும் அவர்களுக்குத் தேவையான உதவியைச் செய்ய முன்வராத பண்புள்ளவர்கள். ஆதலால் தமிழ்ப் புலவர்கள் இத்தகைய பொய்ம்மையாளர்களைப் புகழ்ந்து பாடக்கூடாது என்கின்றார். திருப்புகலூரில் கோயில் கொண்டிருக்கும் எந்தையாகிய சிவனைப் புகழ்ந்துபாடும் தமிழ்ப் புலவர்களுக்கு இம்மையில் இன்பம் உண்டு; பசியாற உண்பதற்குச் சோறு கிடைக்கும். உடுத்திக் கொள்ள நல்ல ஆடையும் கிடைக்கம். எப்பொழுதும் இறைவனைத் தொழுது வழிபடலாம். இம்மையில் புலவர்களை நாடிவரும் துன்பம் நீங்கும். ஆதலால் தமிழ்ப் புலவர்கள் வள்ளல்களைப் பாடாமல் மகாதேவனாகிய சிவனைப் பாடவேண்டும் என்கின்றார் சிவநெறிச் செல்வராகிய சுந்தரர்.

**“தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்**
**சார்விலும் தொண்டர் தருகிலாப்**
**பொய்ம்மை யாளரைப் பாடாதே, எந்தை**
**புகலூர் பாடுமின்! புலவீர்காள்;**
**இம்மையே தரும், சோறும், கூறையும்;**
**ஏத்தலாம் இடர் கெடலும் ஆம்;**
**அம்மையே சிவ லோகம் ஆள்வதற்கு**
**யாதும் ஐயுறவு இல்லையே”**

**(சுந்தரர் தேவாரம், ஏழாந்திருமுறை, திருப்புகலூர்ப் பதிகம், பா.எண்.1)**

எனவும்,

**“மிடுக்குஇலாதானை வீமனே, விறல்விசயனே**
**வில்லுக்கு இவன் என்றும்,**
**கொடுக்கிலா தானைப் பாரியே என்று**
**கூறினும் கொடுப்பார் இலை”**

**(சுந்தரர் தேவாரம், ஏழாந்திருமுறை, திருப்புகலூர்ப் பதிகம், பா.எண்.4)**

எனவும்,

**“வஞ்ச நெஞ்சனை, மாசழக்கனை,**
**பாவியை, வழக்கு இல்லியைப்**
**பஞ்ச துட்டனைச் சாதுவே என்று**
**பாடினினும் கொடுப்பார் இலை” (சுந்தரர், மேலது, பா.எண்.7)**

எனவும்,

**“கற்றிலாதானைக் கற்று நல்லனே!**
**காமதேவனை ஒக்குமே!**
**முற்றுஇலாதானை முற்றனே என்று**
**மொழியினும் கொடுப்பார் இலை” (சுந்தரர், மேலது, பா.எண்.10)**

எனவும் சுந்தரர் பாடியுள்ளார். இதனால் அவரது உலக அனுபத்தையும் வரலாற்று அறிவையும் தெளியலாம்.

**முடிவுரை**

இவ்வாறு பன்னிரு திருமுறைகளில் அக்காலத்திய சமய, சமுதாய, அரசியல் சார்ந்த வாழ்வியல் நெறிகள் பரவலாகப் பயின்று வந்திருப்பினும் மூவர் தேவாரப் பாடல்களில் பயின்று வந்துள்ள வாழ்க்கை நெறிமுறைகள் இந்த ஆய்வுக்கட்டுரையில் விளக்கமாகவும் விரிவாகவும் ஆராய்ந்து விளக்கப் பெற்றுள்ளன.

# பாராட்டுக்கள்

செந்தமிழ்க் கல்லூரியின் மேனாள் மாணவரும் செந்தமிழ்க் கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்கப் பொருளாளருமான தா.வாடிப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி தமிழாசிரியருமான முனைவர் சங்கரலிங்கம் அவர்களுக்கு மாநில நல்லாசிரியர் விருது செப்டம்பர் 5, 2016ல் வழங்கி தமிழக அரசு பெருமைப்படுத்தியது. அன்னாரை நமது தமிழ்ச்சங்கமும் கல்லூரியும் வாழ்த்துகிறது.

# வ.சுப.மாணிக்கனார் நூற்றாண்டு விழாமலர் அரங்கு ஆடுமா?

புலவர் **சா.பன்னீர்செல்வம்**

சொற்கள் இரண்டும் பலவும் இணைந்து, பொருள் உணர்த்தும் நிலையில் சொற்களின் இணைவைத் தொடர் எனல் பொதுவான மொழி மரபு. இரண்டு சொற்கள் இணையும் போது அவை அமைந்தாங்கு பொருளுணர்த்தின் அவற்றின் இணைப்பு தொகாநிலைத் தொடர் எனவும் அவற்றின் இயைபால் மேலுமொரு பொருள் விரியுமாயின் அவ்விணைவு தொகைமொழி தொகைநிலைத் தொடர் எனவும் கொள்ளுதல் தமிழ்மரபு.

அவன் அதியன், அதியன் வந்தான், அதியன் நல்லன் என்றாற் போல்வனவும், மரத்தை வெட்டினான், வட்ட வடிவமான பலகை என்றாற்போல் வனவும் அமைந்தாங்கு பொருள் தருவனவாதலின் தொகாநிலைத் தொடர்கள் எனப்படும். அவற்றுள் மரத்தை வெட்டினான். வட்ட வடிவமான பலகை எனற்பாலன மரம் வெட்டினான். வட்டப்பலகை என நின்று முந்தைய பொருளையே தரும் போழ்து தொகை மொழி-தொகாநிலைத் தொடர் என்றாகும். இவ்வாறாகும் தொகைமொழிகளை ஆசிரியர் தொல்காப்பியர், வேற்றுமைத் தொகை, உவமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என ஆறாக வகைப்படுத்துகின்றார்.

தமிழில் உருபு சேரும் வேற்றுமைகள் ஆறாவதால் வேற்றுமைத் தொகைகள் ஆறாகின்றன. மரம் வெட்டினான் மரத்தை வெட்டினான், பொன் வளையல் - பொன்னால் செய்யப்பட்ட வளையல், பள்ளி சென்றான் - பள்ளிக்குச் சென்றான், அவை நீங்கினான் - அவையிலிருந்து நீங்கினான், அதியன் வீடு - அதியனது வீடு, மலை ஏறினான் - மலைமேல் ஏறினான் - எனப் பொருளாதல் காண்க. மதிமுகம் - மதிபோலும் முகம், உவமைத் தொகை. பச்சைக்கிளி - பச்சை நிறமுடைய கிளி, சதுரப் பலகை - சதுரவடிவான பலகை, நெடுவழி - நெடுமையான - நீளமான வழி, காரவடை - காரச் சுவையுடைய வடை என்பன பண்புத் தொகை. இரவு பகல் உழைத்தேன் - இரவும் பகலும் உழைத்தேன், உம்மைத் தொகை. மலர்விழி வந்தாள் எனும்போது, மலர்போலும் விழி என உவமைத் தொகையாகும் சொற்கள் இரண்டுமிணைந்து அவற்றுக்கப்பாலாக, மலர் போலும் விழியை உடையவள் எனப் பிறிதொன்றைச் சுட்டும் அன்மொழித் தொகையாகிறது.

இவற்றுள் வினைத்தொகையே ஈண்டைய ஆய்வாகின்றது. ஆசிரியர் தொல்காப்பியர்,

**"வினையின் தொகுதி காலத்தியலும்"** (தொல்.898)

என்கிறார். வினைத் தொகையாவது, வினைக்குரிய முக்காலத்தொடும் பொருள் விரியும் என்க. ஊறுகாய் - ஊறிய, ஊறுகின்ற, ஊறும் காய் என முக்காலமாகவும் பொருள் விரியும். உறைபனி, பாய்புனல், உயர்திணை, வளர்பிறை, தேய்பிறை என்றினையவுமன்ன. ஒரே தொகை முழுத் தொடர்ப் பொருளுக்கேற்ப முக்காலங்களுள் ஒரு காலமாகப் பொருள் விரியும். முன்னோர் செல்வழியில் செல்ல வேண்டும் - முன்னோர் சென்ற வழியில் - முன்னோர் கடைப்பிடித்த முறைமையில் செயற்பட வேண்டும். அவன் செல்வழி நல்வழியல்ல - அவன் கடைப்பிடிக்கிற முறைமைய நன்மையாவதல்ல. நாம் செல்வழி நல்வழியாக வேண்டும் - நாம் கடைப்பிடிக்கும் முறைமை நன்முறையாக அமைய வேண்டும் - என்றாகும். நிறைகுடம் தழும்பாது - நிறைந்த குடம் தழும்பாது என்றாகலான், நிறைகுடம் இறந்தகாலமாக மட்டுமே பொருள் விரியும். வறுகடலை, திரிகயிறு, முறுக்குக்கம்பி, சுடுகிழங்கு, பொரியரிசி என்றினையவுமன்ன. எரிதழல் கொணர்க எனல், எரிகின்ற தழல் கொணர்க என நிகழ்காலமாகவே பொருள் விரியும்.

*நிணந்தின் வாயள்* (முருகு - 2)

*கண்டல் வேலிக் கழிசூழ் படப்பை* (நற்:363)

*பாடுபெறு சிறப்பின் கூடல்* (அகம்:231)

என முக்காலமாகப் பொருள் விரிதலும்

*திரிமருப்பு இரலை* (முல்லை:99)

*கலை ஒழி பிணையின் கலங்கி* (நற்:37)

*கைபுனை அரக்கில்லை கதழெரி சூழ்ந்தாங்கு* (கலி:25)

என இறந்தகாலப் பொருள் விரிதலும்,

*ஓடுமின் வழியின் கெடுவ* (நற்:16)

*ஒழுகுநீர் ஆரல் பார்க்கும் குருகு* (குறு:25)

*வீழ்கதிர் விடுத்தபூ* (கலி:29)

என நிகழ்காலம் விரிதலும்

*அஞ்சுவருநெறி* (நற்:33)

*கார்செய்மாலை வருஉம் போழ்தே* (நற்:37)

*கெடுநீரார் காமக்கலன்* (குறள்:605)

என எதிர்காலமாய் விரிதலும் காண்க. உரையாளர் தெய்வச் சிலையார் கொல்லும் யானை, அரியும் வாள் என்றாற் போல்வனவற்றை நிகழ்வு, எதிர்வு இருகாலப் பொருளனவாகக் கொள்கின்றார்.

வருவிருந்து பார்த்திருப்பான்

*செயல்படுமனத்தார் செய்பொருட்ககல்வர்* (நற்.24)

*பிரிந்து செய் பொருட்பிணி* (கலி:39)

என்றாற் போல்வன நிகழ்வு, எதிர்வு என இருதிறமாகவும் பொருள் விரித்தற்குரியன.

இனி, இதனில் உரையாளர் செய்யும் குழப்பங்கள் பலவாகின்றன. வினைத் தொகையாகும் இரண்டு சொற்களும் பெயர்களே என்பது சேனாவரையர் கருத்து. வெள்ளைவாரணனார், ஆ.சிவலிங்கனார் இருவரும் அதனை வழி மொழிகின்றனர். அதற்கவர்கள் கூறும் காரணங்கள் இரண்டு. வினைத் தொகையின் முன்மொழியாகும் கொல், உண், செல், பாய் முதலாயின வினை மட்டுமேயுணர்த்தி காலம் உணர்த்தமாட்டாதமைதலின் அவை, வினை-வினைப்பெயர் இரண்டிற்கும் பொதுவான அடிச்சொல்லாகும் பெயர்களாகவே கொள்ளப்படும். அடுத்து, ஏனைய தொகை மொழிகள் பெயரும் பெயருமாக அமைதலின் வினைத்தொகையும் அவ்வாறே கொளலே தகும்.

வினைத் தொகை காலத்தியலும் - என்பதில், காலத்தியலும் என்பதற்குச் சேனாவரையர் "தொகுதி காலத்தியலும் எனவே, அவ்வினை பிரிந்து நின்றவழித் தோன்றாது தொக்கவழி தொகையாற்றலால் காலம் தோன்றும்" - எனவும், "தொகைப் பொருளாகிய தாம் பிரிந்த வழிப் பெறப்படாமையின் ஆசிரியர் இவற்றைப் புணரியல் நிலையிடை உணரத் தோன்றா என்றார். அதனான் இவை தஞ்சொல்லான் விரிக்கப்படாமையின் பிரிவில் ஒட்டாம்" - எனவும் கூறுகின்றார். ஆனாலவரே தொகை மொழியின் முன்மொழியைத் தனி நிறுத்தி, இக்காலமுணர்த்த மாட்டாது வினை மட்டும் உணர்த்தலின் பெயராமெனல் தன் முரணாகின்றது.

அங்கு நில், இங்கு வா, நீ போ, வீட்டில் இரு, பள்ளிக்கு ஓடு - என்றினையவற்றில் நில், வா, போ, இரு, ஓடு என்பன எக்காலமுணர்த்துவன? அவற்றில் காலவுருபு யாண்டுளது? ஆயின் அவை வினையெனப்படாவா?

வேற்றுமையெனும் உருபேற்றலும், காலமுணர்த்தாமையும் பெயரியல்பு. வினையாவது வேற்றுமை கொள்ளாது காலம் உணர்த்துவது. பொன்தாலி, மதிமுகம், கசப்பு மருந்து, இரவு பகல் - எனப் பெயரும் பெயருமாவன தொக்க தொகையாற்றலால் காலமுணர்த்துதலில்லை. அரிவாள் என்பதில், முன்மொழி வினையல்ல எனில் அது தொக்க தொகையாற்றலால் காலம் உணர்த்துதல் யாண்டையது? தொக்க தொகையாற்றலால் காலமுணர்த்தும் ஒன்றை வினையெனக் கொள்ளுதலாலேற்படும் இழுக்கென்ன?

அடுத்து, ஏனைய தொகை மொழிகள் பெயரும் பெயருமாகின்றன எனலும் முற்றிலும் சரியன்று. மரம் வெட்டினான், ஊர் சென்றான், அவை நீங்கினான், மலை ஏறினான் என்றாற்போலும் வழக்கு மொழிச் சான்றுகளையும்,

| | |
|---|---|
| *பிறர்முகம் நோக்கேன்* | *(புறம்:43)* |
| *ஒருசிறையிருந்தேன்* | *(புறம்: 399)* |
| *பிறர்பழி கூறுவோர் மொழி தேறலையே* | *(புறம்:10)* |
| *மாற்றிரு வேந்தர் மண் நோக்கினையே* | *(புறம்:42)* |
| *ஆண்டு அட்டனன்* | *(புறம்:78)* |

*வாள்தந்தனன் தலையெனக்கிய (புறம்:165)*

*சீருடை இழைபெற்றிசின் (புறம்:11)*

*பனிநீர் மூழ்கார் பாசடகுமிசையார் (புறம்:62)*

இன்னோரன்ன இலக்கிய வழக்குகளையும் உரையாளர் கண்டு கொள்ளாமை வியப்பாகின்றது. பெயரும் வினையுமாகத் தொகை மொழியமைதல் பெருவழக்காதலின் வினைத் தொகையாவது வினையும் பெயருமாதலில் இழுக்கேது மின்றென்க.

ஆசிரியர், வேற்றுமை இயல், உவமை இயல், காலத்தியலும், இன்னதிது வென வரும், இயற்கை எண்ணிய நிலைத்தே, ஈற்று நின்றியலும் எனக்கூறுதலின்றி வேற்றுமை தொகும் உவமை தொகும், காலம் தொகும், இன்னிதிது வெனல் தொகும், உம்தொகும், ஈற்றில் தொகும் என்றாரல்லரதலானும், பின்னும் "எல்லாத் தொகையும் ஒரு சொன்னடைய" - என்றமையானும் வினைத் தொகையாவது பெயரெச்சம் நின்று வெளிப்படலெனலும் தகாதென்க. ஆயின் எழுத்தோத்தினுள், "செய்யும், செய்த வென்னும் கிளவியின் மெய்யொருங் கியலும் தொழில் தொகுமொழியும் புணரியல் நிலையிடை உணரத் தோன்றா" என்ற தென்னை யெனின், ஊறுகாள் என்னும் வினைத்தொகை ஊறிய - ஊறுகிற - ஊறும் காய் எனப் பொருள் விரியுமேனும், பனங்காய் என்னும் வேறுமைத் தொகையை, பனை-காய் என நிறுத்திப் புணரியல் விதிகளின் படிப் பனங்காய் எனப் புணர்த்துமாறு, ஊறிய-காய் என நிறுத்திப் புணரியல் விதிகளைக் கொண்டு ஊறுகாய் எனப் புணர்த்துதல் ஏலாதென்றதன்றி, பெயரெச்சம் நின்று வெளிப்படுமெனல் கருத்தன்று. அவ்வாற்றான், வினைத்தொகை விரியுங்கால் பெயரெச்சப் பொருளவாய் விரியும் எனல் அமைவாதலும் உணர்க.

இனி, இரண்டு முதலாயின இணைதலை தொகை, தொகுப்பு, தொகுதி, தொகைநிலை, தொகுநிலை எனல் தமிழ் மரபு.

*பல்தொகைக் கலப்பையர் (அகம்:301)*

*துய்த்தலை இறவொடு தொகைமீன் பெறீஇயர் (நற்.111)*

*நரம்பார்த் தன்ன இன்குரல் தொகுதியொடு (முருகு:218)*

*அரைசர் ஒண்படைத் தொகுதியின் இலங்கித் தோன்றும் (நற்: 291)*

*திரங்குமரல் கவ்விய கையறு தொகுநிலை (அகம்: 199)*

*தகைமிகு தொகைவகை அறியுஞ்சான்றோர் (கலி: 39)*

எனவே, தொகைமொழியானது இரண்டு சொற்கள் இணையுங்கால் அவற்றின் சொற்பொருளுடன், அவற்றின் இணைவால் மேலுமொரு பொருள் தொகுதல் - இணைதல் எனக் கொள்ளுதலின்றி, அவற்றிடையே ஒன்று மறைந்து நின்று வெளிப்பட்டதெனல் கருத்தன்று. ஆக, தொகை மொழியாவது, இரு சொற்கள் தொகும் - இணையும் மொழி எனவும், இணையும் சொற்களுக்கிடையில் மற்றுமொரு பொருள் தொகும் - இணையும் மொழி

எனவும் இரட்டுற மொழிதலாகக் கொள்க.

இனி, வினைத் தொகையாவது வினையும் அறுவகைப் பெயரும் இணைந்தமைதல் எனக் கொண்டு, வினை பெயர் என்றமைவன வெல்லாமும் வினைத் தொகையாக உரையாளர் பட்டியலிடுதல் தகவன்று. ஊறுகாய், ஊறியகாய் - ஊறுகிற காய் - ஊறும் காய் எனப் பொருள்விரியுங்கால் ஊறுதல் காயின் வினையாகின்றது. உறைபனி, பாய்புனல், வளர்பிறை என்பவற்றில் உறைதல் பனியின்வினை, பாய்தல் புனலின் வினை, வளர்தல் பிறையின் வினையாகின்றன. அதாவது, வினைத் தொகையின் பின்மொழியானது முன்மொழியாகும் வினைக்குரிய வினை முதலாக வேண்டும். அதுதான் முறை. உண்நீர் என்பதில் நீர் உண்ணுதலுக்காட்படும் செயப்படுபொருளன்றி, உண்ணுதலைச் செய்யும் வினை முதலன்று. ஆயினும் கட்டப்பட்ட - கட்டப்படுகிற - கட்டப்படும் வீடு எனும் செயப்பாட்டு வினைப் பொருண்மையாவனவற்றை, கட்டிய - கட்டுகிற - கட்டும் வீடு எனச் செய்வினை வாய்பாடாகக் கூறும் வழக்காற்றின்படி, உண்டநீர், உண்ணுகின்ற நீர், உண்ணும் நீர் எனப் பொருள் விரித்தல் அமைவுடையதே. செய்குன்று, செய்குறி, செய்பொருள், இடுதேள் என்றனையவும் அன்ன. இவற்றுள், உண்நீர் - உண்ணுதற்குரிய நீர் என நான்காம் வேற்றுமையாகப் பொருள் விரித்தலும் தகுமெனக் கொள்க.

ஆயின், ஆடரங்கு என்பதில், அரங்கு ஆடுதலைச் செய்யும் வினை முதலுமல்ல; ஆடுதல் வினைக்காட்படும் செயப்படுபொருளுமல்ல.

*கூத்தர் ஆடுகளம் கடுக்கும்* (புறம்:28)

*அணிலாடு முன்றில்* (குறு:41)

*அணங்குறு மகளிர் ஆடுகளம்* (குறிஞ்சி 174)

என்பவற்றில் ஆடுதல் வினையைச் செய்வோர் கூத்தரும், அணிலும், மகளிருமன்றி, களமும், முன்றிலுமல்லவே? சுடுகாடு எனும் போழ்தில் காடு பிணத்தைச் சுடுகின்றதா - அன்றி, பிணம் காட்டைச் சுடுகின்றதா? இரண்டுமில்லை. எனவே, ஆடுகளம், ஆடரங்கு, ஓடுதளம், சுடுகாடு, இடுகாடு என்றினையன, ஆடுதற்குரிய களம் - அரங்கு, ஓடுதற்குரிய தளம், சுடுதற்குரிய காடு, இடுதற்குரிய காடு என்னுமாறு நான்காம் வேற்றுமைத் தொடராகப் பொருள் விரிவனவன்றி வினைத் தொகையாகப் பொருள் விரித்தல் அடாதெனத் தெளிக. இசையரங்கு, பயிலரங்கு என்றாற் போல்வனவுமன்ன. இவற்றில் ஆடு, ஓடு, சுடு, இடு, இசை, பயில் என்பன முதனிலைத் தொழிற்பெயரெனக் கொள்க. என்னை?

*நின்இகழ்பாடுவோர் எருத்தடங்கப்*

*புகழ்பாடுவோர் பொலிவு தோன்ற* (புறம்:40)

*புகழ்பட வாழாதார் தம் நோவார்* (குறள்:237)

*ஆடுறுகுழிசி பாடின்று தூக்க* (புறம்:371)

*உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்* (குறள் 1201)

*இரு நோக்கு இவள் உண்கண் உள்ளது* (குறள்: 1091)

என்பவற்றில் இகழ்தல், புகழ்தல், ஆடுதல், மகிழ்தல், நோக்குதல் எனத் தொழிற் பெயராதல் காண்க.

உயர்மரம் என்னும் போழ்தில், மரம் வளருந் தன்மைத்தாயின் வினைத் தொகையாகவும், மரத்தின் நெடுமை நோக்கியதாயின் பண்புத் தொகையாகவும் கொள்க. உயர்பதவி உயர்நிலை என்றனையவுமன்ன.

*உயர்நிலை இதணம் ஏறி* (மலைபடு: 204)

*ஊகம் வேய்ந்த உயர்நிலை வரைப்பு* (பெரும்:122)

என்றாற்போல்வன நெடுமையெனும் பண்புத் தொகையும்,

*உள்ளல் ஓம்புமின் உயர்மொழிப் புலவீர்* (புறம்: 394)

*உயர்நிலை உலகமும் சிறிதால்* (குறு: 361)

*உடம் பொழித்து உயர்உலகு இனிது பெற்றாங்கு* (கலி: 138)

என்றினையன உயர்வு என்னும் பண்புத் தொகையுமாயின.

*தாழ்காவின் நனை ஞாழலொடு* (பொரு: 196)

*தாழ்காவின் அவிர்சடை முனிவர்* (பட்டினப்: 53)

என்னுமிடங்களில் சோலையும், சோலையிருக்கும் இடமும் தாழ்ந்த - தாழுகின்ற - தாழும் தன்மையவல்ல. தாழ்வான - பள்ளமான இடத்துள்ள சோலை என்றாகலான், இவை போல்வனவும் பண்புத்தொகையேயாம்.

## முடிப்பு

ஆக, வினைத்தொகையின் முன் மொழி, வினையன்றாயின், காலப் பொருள் விரிதல் ஏலாது. பின் மொழியாவது, வினை செய்யும் வினை முதலன்றாயின் முன் மொழி வினையாதல் பொருந்தாது. எனவே, வினைத் தொகையாவது, வினையும் பெயருமாக அமைதலும், பின்மொழியாகும் பெயர், முன்மொழியாகும் வினை செய்தற்குரிய வினை முதலாதலும் அடிப்படைக் கடப்பாடென்பதும், பொருள் விரிதலாவது, தொகையாற்றலால் பொருள் இணைதலன்றி, ஒளிந்திருந்து வெளிப்படல் இன்றென்பதும் தெள்ளிதினுணர்க.

# சிறுபஞ்சமூலத்தில் மருத்துவம்

முனைவர் செ.ரவிசங்கர்
உதவிப்பேராசிரியர்
ஒப்பிலக்கியத்துறை,தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

சென்ற இதழின் தொடர்ச்சி

### அழகுக்கு மருந்து

அழகு என்பது எது? அந்த அழகினை அடைவதற்கான மருந்து எது? என்பதற்குச் சிறுபஞ்சமூலம் மிகத் தெளிவாகக் கருத்துக்களை எடுத்தியம்புகிறது. முதலில் அழகு என்பதனை மிகப்பெரிய பட்டியலிட்டுப் பின்பு அது இல்லை என்றுகூறி உண்மையான அழகு நூல்களுக்குப் பொருந்திய சொல்வன்மைதான் எனக் கூறுகிறது.

*"மயிர்வனப்பும் கண்கவரும் மார்பின் வனப்பும்*
*உகிர் வனப்பும் காதின் வனப்பும் - செயிர் தீர்ந்த*
*பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த*
*சொல்லின் வனப்பே வனப்பு" - 37*

இன்று வனப்பு என்பதைக் குறிப்பிடும் போது தலையில் உள்ள தலைமுடியால் வரும் வனப்பு, கண்டவர் விரும்பும் மார்பின் அழகு, நகத்தின் அழகு, காதுகளின் அழகு, பற்களின் அழகு ஆகிய இவைதான் இன்றைய அழகு ஆகும் என்பர். ஆனால் இவை தவிர்த்து உண்மையான அழகு என்பது, நூல்களுக்குப் பொருந்திய சொல் வன்மையினால் வரும் அழகே சிறந்த அழகாகும் என்கின்றது சிறுபஞ்சமூலம். இது மாயையில் உள்ளவர்களுக்கு ஆசிரியர் தரும் மருந்து ஆகும். கல்வியின் முக்கியத்துவத்தைப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன. அதில் சிறுபஞ்சமூலம் கல்வியை அழகுக்கான மருந்தாகத் தந்துள்ளது சிறப்பிற்குரியது.

### பெண்டிர் சிறப்புப் பெற மருந்து

பெண்கள் என்ன என்ன செய்ய வேண்டும் என்பதனையும் சிறுபஞ்சமூலம் மருந்தாகக் கொடுத்துள்ளது.

*"வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்*
*வெருவாமை வீழ் விருந்தோம்பித் - திருவாக்குந்*
*தெய்வத்தை எஞ்ஞான்றும் தெற்ற வழிபாடு*
*செய்வதே பெண்டிர் சிறப்பு" - 43*

பெண் கணவரது வருவாயின் அளவை அறிந்து அதற்கேற்றவாறு செலவு செய்ய வேண்டும். சுற்றத்தார் அதாவது, மாமன், மாமியார் போன்றவர்கள் பயந்து ஒதுங்காமல் தம்மை விரும்பிக் கொள்ளுமாறு தழுவிக் கொள்ள வேண்டும். இவைகள் பெண்களுக்குச் சிறப்பினைத் தருவன ஆகும். ஆனால் இன்று எந்தப்

பெண்களும் இவைகளைச் செய்வது இல்லை, செய்ய முன் வருவதும் இல்லை. வருவாய்க்கு அதிகமாகச் செலவு செய்வது, அதன் மூலமாகக் கடன்படுவது, வாழ்க்கையில் நிம்மதி இழப்பது, மாமனார் மாமியாரைப் பெரிய எதிரியாக நினைத்து ஒதுக்குவது, உணவினைக் குறைவாகச் சமைத்துத் தனக்கும் கணவருக்கும் பிள்ளைகளுக்கும் போதுமானதாக அமையாமல் போவது, ஆகவே விருந்தோம்பல் செய்ய மறுப்பது, கடவுளைப் பொழுது போக்கிற்காகவும், மற்றவர்களுக்காகவும் வணங்குவது இவையெல்லாம் இன்றைய பெண்களின் செயல்பாடுகள் ஆகும். அதனால்தான் இன்று குடும்பம் சீரழிந்து விவாகரத்து வரை சென்று விடுகின்றது. இவற்றையெல்லாம் தவிர்த்துச் சிறுபஞ்சமூலம் குறிப்பிட்டுள்ள ஐந்து தொழில்களையும் மிகச்சரியாகச் செய்துவந்தால் மிகப்பெரிய வெற்றியை இன்றைய பெண்கள் பெறுவார்கள். இவைதான் பெண்களுக்கான மருந்தாக இன்று தேவைப்படுகின்றன.

### உயர் பதவி அடைய மருந்து

உயர்ந்த பதவிகளை அடைவதற்கும் தலைமைப் பதவியை அடைவதற்கும் இன்று பல்வேறான வழிமுறைகளைப் பின்பற்றுகின்றனர். ஆனால் சிறுபஞ்சமூலம் முக்கியமான மருந்தான கருத்துக்களைத் தந்துள்ளது. ஒருவன் உயர்பதவியாகிய தலைமையை அடைய,

*"கொல்லாமை நன்று கொலை தீது எழுத்தினைக்*
*கல்லாமை தீது கதந்தீது - நல்லார்*
*மொழியாமை முன்னே முழுதுங் கிளைஞர்*
*பழியாமை பல்லார் பதி"* - 51

என்கிறது. அதாவது பிற உயிர்களைக் கொல்லாதிருத்தல் வேண்டும், கல்வியைக் கற்க வேண்டும், பிறரிடம் கோபம் கொள்ளக்கூடாது, அறிவுடையார் அறிவுரை சொல்வதற்கு முன்பே தன்னுடைய சுற்றத்தினரைப் பழிக்காமல் இருக்க வேண்டும். அப்போதுதான் தலைவன் ஆவதற்கு ஒருவன் தகுதியான வனாக மாறுகிறான். இந்தச் செயல்கள் ஒருவனுக்கு மருந்து போன்றதும் ஆகும். மேலும்,

*"சிறைக் கிடந்தார் செத்தார்க்கு நோற்பார் பலநாள்*
*உறைக்கிடந்தார் ஒன்றிடையிட்டு உண்பார் - பிறைக்கிடந்து*
*முற்றனைத்தும் உண்ணா தவர்க்கீந்தார் மன்னராய்க்*
*கற்றனைத்தும் வாழ்வார் கலந்து"* - 71

உணவளிப்பவர்கள் உயர்ந்த பதவியை அடைவார்கள் என்பது இதன் கருத்து. அதாவது சிறைவாசம் புரிவோர்க்கும், இறந்தவர் நன்மையுற வேண்டி உண்ணாது நோற்பாருக்கும், தாம் கொண்ட நோயின் காரணமாக மருந்துண்டு பத்தியத்தில் இருப்பவர்க்கும், ஒரு நாள் விட்டு ஒரு நாள் அனைத்து வளர்பிறை நாட்களிலும் உண்ணாது இருப்பவர்களுக்கும் உணவளித்தவர்கள் அனைத்து நீதிகளையும் படித்து மன்னராகி உயர்ந்த பதவியில் சேர்ந்து வாழ்வார்கள் என்கிறது. இன்று உயர்ந்த பதவிகளுக்கு ஆசைப்பட்டுப் பணம், பொருள்

போன்றவற்றைச் சடங்கு சம்பிரதாயங்களில் விட்டு ஏமாற்றம் அடைகின்றனர். இவர்களுக்கு மருந்தாகச் சிறுபஞ்சமூலம் இக்கருத்தினை வலியுறுத்தி உள்ளது.

**80 வயது வரை வாழ மருந்து**

இன்று 60 வயது வரை வாழ்ந்தாலே பெரிய சாதனையாகக் கருதுகின்றனர். அதிலும் நோய் இல்லாமல் வாழ்வது மிகப்பெரிய செயல். ஆனால் சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் 80 வயது வரை வாழ மருந்து தருகிறார்.

*"பஞ்சப் பொழுது பாத்துண்பான் கரவாதான்*
*அஞ்சாது உடைபடையுள் போந்தெறிவான் - எஞ்சாதே*
*உண்பதுமுன் ஈவான் குழவி பலி கொடுப்பான்*
*எண்பதின் மேலும் வாழ்வான்"* - 79

பஞ்ச காலத்தில் பலருக்கும் பகிர்ந்தளித்து உண்பவன், தன்னிடம் வீணாக யாருக்கும் பயன்படாமல் காத்துக் கொண்டிருக்கும் பொருளைப் பிறருக்குக் கொடுப்பவன், தன் படையைக் காப்பவன், பசித்த குழந்தைக்கு உணவளிப்பவன் 80 வயதுக்கு மேல் இருந்து சுகமாக வாழ்வான். ஆனால், இது தெரியாமல் இன்று பலரும் விரைவில் இறந்து போய் விடுகின்றனர்.

**முடிவுரை**

மனிதன் வாழ்வதற்கான கருத்துக்களைச் சிறுபஞ்சமூலம் தெளிவாகவும் புரியும் வகையிலும் எடுத்துரைக்கின்றது. அதாவது மருந்து போன்ற கருத்துக்களை மனித வாழ்க்கைக்கு வழங்கியுள்ளது சிறப்புக்குரியதாக அமைந்துள்ளது.


| இதழ்க்கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 200 | ரூ. 1,000 |
| ஆயுள்கட்டணம் | ரூ. 2,000 | ரூ. 10,000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 10,000 | ரூ. 20,000 |
| தனி இதழ்க்கட்டணம் | ரூ. 10 | |

# உலகியலும் இலக்கியமும்

செந்தமிழ் தொகுதி எண்.46
பகுதி:1
நவ.-டிச., 1949ல் வெளிவந்தது

உயர்திரு. சி.கணேசையர்
வருத்தலைவிளான்,
யாழ்ப்பாணம்

ஒருவன் ஒருத்தியையே மணஞ்செய்து கொள்வது பொதுவான உலகியல்; இருமகளிரை மணஞ்செய்து கொள்வதும் உண்டு. ஒருவன் பல மகளிரை மணஞ்செய்து கொள்வது இக்காலத்தில் அரிதினுமரிது. ஒருத்தியை மணஞ்செய்து கொண்டு வாழ்பவனுக்கு, அவ்வாழ்விற் கலகமேற்படல் மிக அரிதாகும். இருமகளிரை மணஞ்செய்துகொண்டு வாழ்பவனுக்கு அவ்வாழ்விற் கலகமேற்படல் துணிபேயாகும். ஏனெனின்? இருமகளிருள்ளும் ஒருத்திக்கு முந்தி ஒருபொருளைக் கொடுத்தாலாவது ஒருத்தியை முந்தி அழைத்தாலாவது வேறு காரணங்களாலாவது என்னினும் அவள்பாலன்புடையை என்று மற்றையாள் அவனுடன் பிணங்குவாளாகலான் இருமகளிரையும் ஒன்றுபடுத்தி வாழ்வது அவனுக்கு மிக அரிதாகும். அன்றியும் அவன்காதல் காரணமாக ஒருத்திமேலொருத்தி பொறாமைகொண்டு, அவனுடனும் தம்முள்ளும் கலகமிடுவதும் உண்டு. அவர்கள் கலகமிடும்போது அவர்களால் வளர்க்கப் பட்டனவும் அவர்களைச் சார்ந்தவர்களும் அவர்கள் பொருட்டாகத் தம்முட் கலகமிடுவதும் உண்டு. அதனாலும் அவர்களை ஒன்றுபடுத்தி வாழ்தல் அரிதென்பது பெறப்படும். இவைபோல்வனவெல்லாம் உலகியலேயாம். இவைபோலும் உலகியல்களை இலக்கிய ஆசிரியர்கள் தம்மிலக்கியங்களுள் சுவைபட அமைத்துக்காட்டுதலுண்டு. முன்பின்கொடுத்தலால் இருமகளிர் தம் நாயகனோடு பிணங்குவதை,

*"பொன்பெற்ற மார்ப னொருவன்சில போது கொய்து*
*கொன்பெற்ற வேற்கண் மடவார்கைக் கொடுத்த லோடும்*
*பின்பெற்ற நங்கை வெகுண்டாள் பழுதென்று பேசி*
*முன்பெற் றவளு மவைசிந்தி முனிந்து போனாள்"*

என்று கந்தபுராணகாரர் கூறியதால் அறியலாம். முன்பின் கொடுத்தலாலன்றிச் சமமாகக் கொடுத்தது பற்றியும் இருமகளிர் தம் நாயகனோடு பிணங்கினார்கள் எனக் கம்பர் கூறுவர். அதனை,

*"சந்திக்க லாவெண் மதிவாணுத லாட னக்கும்*
*வந்திக்க லாகு மடவாட்கும் வகுத்து நல்கி*
*நிந்திக்க லாகா வுருவத்தின் னின்ற போழ்தும்*
*சிந்திக்க லாப மயிற்கண்கள் சிவந்து போனார்."*

என்னுஞ் செய்யுளான் அறியலாம்.

இனி நாயகன்காதல் காரணமாக ஒருத்திமேல் ஒருத்தி பொறாமைகொண்டு பிணங்கிக் கலகமிடுவதையும், அவர்கள் காரணமாக அவர்களால் வளர்க்கப்பட்டனவும் அவர்களைச் சார்ந்தாரும் தம்முட் பிணங்கிக் கலகமிடுவதையும் பின் காட்டப்படும் பரிபாடலென்னும் சங்க இலக்கியத்திற் குன்றம்பூதனார் என்னும் புலவராற்சுவையுறப் பாடப்பெற்ற 9ஆம் பாடலில் வரும் அடிகளின்கருத்தான் உணரலாம். அவ்வடிகள் வருமாறு

*"ஊழாரத் தோய்கரை நூக்கிப் புனறந்த*
*காழாரத் தம்புகை சுற்றிய தார்மார்பிற்*
*கேழாரம் பொற்ப வருவானைத் தோழாஅ*
*வாழிய மாயாநின் றவறிலை யெம்போலுங்*
*கேழிலார் மாணல முண்கோ திருவுடையார்*
*மென்றோண்மே லல்கி நல்கலு மின்று*
*வையெயிற் றெய்யா மகளிர் திறமினிப்*
*பெய்ய வுழக்கு மழைக்காமற் றைய*
*கரையாவெந் நோக்கத்தாற் கைசுட்டிப் பெண்டி*
*னிகலி னிகந்தாளை யவ்வே டலைக்கண்ணி*
*திருந்தடி தோயத் திறைகொடுப் பானை*
*வருந்த லெனவவற்கு மார்பளிப் பாளைக்*
*குறுகலென் றொள்ளிழை கோதைகோ லாக*
*விறுகிறுக யாத்துப் புடைப்ப*
*வொருவர் மயிலொருவ ரொண்மயிலோ டேல*
*விருவர் வான்கிளி யேற்பின் மழலை*
*செறிகொண்டை மேல்வண்டு சென்றுபாய்ந் தன்றே*
*வெறிகொண்டான் குன்றத்து வண்டு;*
*தார்தார் பிணக்குவார் கண்ணியோச்சித் தடுமாறுவார்*
*மார்பணி கொங்கைவார் மத்திகையாப் புடைப்பார்*
*கோதை வரிப்பந்து கொண்டெறிவார்*
*பேதை மடநோக்கம் பிறிதாகவூத*
*நுடங்க நொசிநுசுப்பார் நூழி றலைக்கொள்ளக்*
*கயம்படு கமழ்சென்னிக் களிற்றியல்கைம் மாறுவார்*
*வயம்படு பரிப்புரவி மார்க்கம் வருவார்*
*தேரணி யணிகயிறு தெரிபு வருவார்*
*வரிசிலை வளைய மார்புற வாங்குவார்*

*வாளி வாளிக ணிலைபெற மறலுவார்*
*தோள்வளை யாழி சுழற்றுவார்*
*மென்சீர் மயிலிய லவர்*
*வாண்மிகு வயமொய்ம்பின்*
*வரையகலத்தவனை வானவன் மகண்*
*மாணெழின் மலருண்கண்*
*மடமொழியவ ருடன் சுற்றிக்*
*கடிசுனையுட் குளித்தாடுநரு*
*மறையணிந்த வருஞ்சுனையா*
*னறவுண் வண்டாய் நரம்புளர்நருஞ்*
*சிகைமயிலாய்த் தோகைவிரித் தாடுநருங்*
*கோகுலமாய்க் கூவுநரு*
*மாகுல மாகுநருங்*
*குறிஞ்சிக் குன்றவர் மறங்கெழு வள்ளிதமர்*
*வித்தகத் தும்பை விளைத்தலான் வென்வேலாற்*
*கொத்தன்று தண்பரங் குன்று.”*

இவ்வடிகளின் பொருள்; - “முருகவேள் வள்ளியம்மையாரைக் களவினான் மணந்து, அவ்வம்மையாருடனுறைந்து பின் தன் பால் வர, அம்முருகவேளால் முன் மணக்கப்பட்ட தெய்வயானையார், அவ்வேளுடன் பிணங்கி, வஞ்சனே! நீ வாழிய; நின்னையறியாது அகப்பட்ட மகளிர்திறம், இனி மழைபெய்ய வேண்டிவருந்தும் காவையொக்கும்; ஆதலால் அவரே தவறுடையராவதல்லது நீ தவறுடையையல்லை; நின்னையெய்துந் திருவுடையாரது மென்றோண்மேல் தங்கி நல்கலும் நினக்கின்று; ஆகையால் நின் மாணலம் யான் உண்ணக் கடவேனோ? என்று தன்னைத் தன்கையாற் சுட்டிக்காட்டிச் சொல்லி வெகுளிமிக்க நோக்கத்துடனே, அவன், பின் மணந்த வள்ளியம்மையாரென்னும் பெண்டு காரணமாக உண்டான புலவியானே தன்னை நீங்கிய அத்தெய்வயானையாரைச் சென்றெய்தி, அம்முருகவேள் வணக்கமாகிய திறையைக் கொடுக்க வணங்க (அதனால்) அவ்வம்மையார் புலவிநீங்கி, அவ்வேளை வருந்தலென்று சொல்லித் தன்மார்பையளிப்ப, அதனைக்கண்டு வள்ளியம்மையார், இப்பொழுது அவளை நீ குறுகாதே என அவன்கையை மிக இறுகக் கட்டித் தன் மாலையைக் கோலாகக் கொண்டு புடைப்ப (அடிப்ப); அதனைக் கண்டு ஒருவர்மயில் ஒருவர்மயிலோ டெதிர்க்க, இருவர் வான்கிளியும் தம்முள் மழலையேற்கின்ற வளவிலே (ஒன்றோடொன்று ஏச்சுப்படுகின்றவளவிலே) வெறியாட்டை விரும்பிய முருகவேளின் குன்றத்துவண்டு (வள்ளியம்மையாரது கொண்டைமேலுள்ள வண்டு) தெய்வயானையாரது கொண்டைமேலுள்ள வண்டை மேற்சென்று

பாய்ந்தது (எதிர்த்தது). அங்ஙனம் பாய்ந்த அதனைக்கண்டு, தெய்வயானையாரது பாங்கியர் வள்ளிபாங்கியரோடு மாறுபட்டுத் தாரையும் தாரையும் பிணக்குவார்; கண்ணிகளை எறிந்து மாறுபடுவார்; கொங்கைமேலணிந்த கச்சை மத்திகையாகக்கொண்டு அடிப்பார்; கோதையையும், வரிப்பந்தையுங்கொண்டு ஒருவர்மேல் ஒருவர் எறிவாராய்த் தம் பேதைமையையுடைய மெல்லிய நோக்கம் வெகுளியான் வேறுபட, வாயால் ஊத நுடங்குகின்ற முரியும் இடையினராயிருந்தே (மெல்லியராயிருந்தே) நெருங்கியோரை மேற்கொள்ள; அதனைக்கண்டு, வள்ளிபாங்கியராகிய மெல்லிய மயில்போலும் சாயலார், தோட்டிப்புண்ணால் மென்மைப்பட்ட சென்னியையுடைத்தாய மதங்கமழும் களிற்றின் போரியல்பைத் தம்பாற்கொள்வார், குதிரைக்கதியால் வருவார், தேர்களினணிபோல் வடிகயிற்றைத் தெரிந்து கொண்டுவருவார்; கண்களாகிய அம்புகள் அவர்கள் மார்பிற்பொருந்தப் புருவங்களாகிய வில்லை வளைப்பார்; வாள்வீரர் நிலைமைப்படப் பகைப்பார் (வெகுண்டுபார்ப்பார்), தமது தோள்வளைகளைக் கழற்றிச் சக்கரப்படைகளாகக் கையிற்கொண்டு சுழற்றியெறிவாராக; தெய்வானையின் பாங்கியர், அதற்கு அஞ்சி முருகவேளைத் தொக்குச் சூழ்ந்து கொண்டு மணம் பொருந்திய அம்மலைச்சுனைக்கண் குளித்து விளையாடுவாரும், அச்சுனைக்கண் வண்டாய்நின்று யாழிசையைப் பாடுவாரும்; சூட்டையுடைய மயில்போலநின்று தோகைபோலுங் கூந்தலை விரித்து ஆடுவாரும், குயிலாகிநின்று கூவுவாரும், ஆரவாரமுடையருமாகக் குறிஞ்சி நிலத்துமக்களாகிய குறவர்பெற்ற மறவியல்புவிளங்கும் கொடிச்சியர் திருந்திய தும்பைப்போரைச் செய்தலால் வெல்லும் வேற்படையையுடைய முருகவேளின் வெறியாட்டுக்குத் தண்ணிய திருப்பரங்குன்று இயைந்ததே" என்பதாகும்.

இச்செய்யுட்கருத்தானே, இச்செய்யுளைப்பாடிய புலவர் முருகவேளின் தேவிமாரிருவரும் அம்முருகவேளின் காதல்காரணமாகக் கலகமிடுவதையும், தம்முட்பிணங்கிய இருவீட்டார் கலகமிடும் போது அவர்களால் வளர்க்கப்பட்ட நாய்களும் தம்முட்குரைத்துக் கலகமிடுவதுபோல அத்தேவியரால் வளர்க்கப் பட்ட மயின்முதலியன தம்முட் கலகமிடுவதையும், அவர்கள் பாங்கியரும் தம்முட் கலகமிவடுவதையும் படிப்போரின்புறுமாறு போர்செய்வாரினியல்புற அமைத்து, மிக அழகாகச் சுவைபடக் கூறியிருத்தல் காண்க. அன்றியும், இச்செய்யுளைப் பாடிய புலவர் தெய்வானையாருடைய பாங்கியர் பொரும்வலியிலர் என்பது தோன்ற "ஊதநுடங்கும் நொசி நுசுப்பார்" என்றும், "நூழிறலைக்கொள்ள" என்றும், வள்ளியம்மையாருடைய பாங்கியர் பெரும்வலியுடையர் என்பது தோன்றக் "குறிஞ்சிக்குன்றவர் மறங்கெழுவள்ளிதமர்" என்றும், "வித்தகத்தும்பை" என்றும் நுண்பொருள்தரத் தெரித்துக்கூறியதும் மிகவும் சுவைதந்து அவர்தம் நுண்மதியை யுணர்த்திநிற்றலும் காண்க.

இன்னும் ஒருதலைமகனுடைய மனைவியர்பாற் பணியாளராயிருப்பாரும் அத்தலைமகனால் அன்பு செய்யப்பட்டாரொருவர் தமக்கு ஒரு சிறு தீங்கு

செய்யினும் அதனைத் தம்மனத்தில் வைத்திருந்து தாம் அவர்க்குப் பதில் செய்தற்கேற்ற காலம்நோக்கித் தம்மாற்செய்தல்முடியாதாயினும் செய்தற்கேற்றாரையடைந்து அவர் தமக்குத் தீமைசெய்தார்மேல் நன்மனமுடைய ராயினும் அம்மனத்தைத் தம்சூழ்ச்சிவலியினாலே புத்திகூறித் திரியச் செய்து அவரால் அத்தீமைசெய்தாரைக் கெடுப்பித்தல் உலகியல்பாகும். இவ்வியல்பை முன்னொருநாள் இராமபிரான் தன் சிறு வயதிலே விளையாட்டாக உண்டையால் எய்து தன்னை அவமானப்படுத்தியதை, மந்தரை என்பாள் தன்மனத்தில் வைத்திருந்து பின் இராமபிரானுக்கு முடிசூட்டுமாறு தயரதன், நியமித்த காலத்திலே அவள் இக்காலமே இராமனை அவமானப்படுத்தற்கேற்ற சமயமெனச் சிந்தித்து அவன் முடிசூட்டைக் கெடுத்தற்கேற்றவள் கைகேயியே என ஆலோசித்து அவளையடைந்து அவள் இராமபிரான்பால் நன்மன முடையளாயிருந்தும் அவள் மனத்தைத் தன் சூழ்ச்சியின் வலியினாலே புத்திகூறித் திரியச் செய்து, அவளால் அவனை முடிசூடாமற் கெடுப்பித்தாள் என்று கம்பராலியற்றப்பட்ட இராமாவதாரம் எனப் பெயரிய பெருங்காப்பியத்துள், மந்தரைப்படலத்துக் கூறப்பட்ட சரிதத்தான் அறியலாம். மந்தரையின் சூழ்ச்சிவலியை அவ்விராமாவதாரத்து மந்தரை சூழ்ச்சிப்படலத்துள் வரும், "அஞ்சி மந்தரை யகன்றிலள்" என்பதை முதலாகவுடைய செய்யுள் தொடங்கிக் "கெடுத்தொழிந்தனை யுனக்கரும் புதல்வனை" என்பதை முதலாகவுடைய செய்யுளிறு தியாகவுள்ள செய்யுட்களான் உணர்க. கைகேயி இராமபிரான்பால் நன்மனமுடையளா யிருந்தாளென்பதைப்,

*"பராவரும் புதல்வரைப் பயக்க யாவரு*
*முராவருந் துயரைவிட் டுறுதி காண்பரால்*
*விராவரும் புவிக்கெலாம் வேத மேயன*
*விராமனைப் பயந்தவெற் கிடருண் டோவென்றாள்"*

என்னுஞ் செய்யுளானும், "ஆழ்ந்தபேரன்பினா ளனையகூறலும்" என்னுஞ் செய்யுளடியானும், அவள் மனந்திரிந்தமையை, -

*"தீய மந்தரை யிவ்வுரை செப்பலுந் தேவி*
*தூய சிந்தையும் திரிந்தது"*

என்னும் செய்யுளடிகளானும்,

*"அனைய தன்மைய ளாகிய கைகய னன்னம்*
*வினை நிரம்பிய கூனியை விரும்பின ணோக்கி*
*யெனையு வந்தனை யினியையென் மகனுக்கு மனையான்*
*புனையு நீண்முடி பெறும்படி புகலுதி யென்றாள்."*

என்னுஞ் செய்யுளானும் அறிக.

# சங்கச் செய்திகள்

1.09.2016ஆம் நாள் தனிநாயக அடிகள் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வு சங்க வளாகத்தில் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்றது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் ஊற்றுக்கண்ணான தனிநாயக அடிகளாரின் வாழ்வு மற்றும் பணிகள் குறித்து இளம் இலக்கியம் மூன்றாமாண்டு மாணவி மு.சிவகாமி எடுத்துரைத்தார், மேலும் அடிகள் அவர்கள் ஊருக்குள் உறங்கிய தமிழை உலகெலாம் மணக்கும்படி உலகத் தமிழ் மாநாட்டினை நடத்திய விதத்தினை மாணவர்களுக்குப் புரியும்படி எடுத்துரைத்தார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணை முதல்வர், உதவிப் பேராசிரியர்கள் மற்றும் மாணாக்கர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக தனிநாயக அடிகளாரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

6.09.2016ஆம் நாள் சி.இலக்குவனார் அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் காலை 11.00 மணியளவில் நடைபெற்றது. உதவிப் பேராசிரியர் பா.நேருஜி அன்னார் குறித்து நினைவுச் சொற்பொழிவாற்றினார். அதில் தமிழ்க் காப்புக் கழகம் மூலமாகவும் 'சங்க இலக்கியம்' 'குறள் நெறி' முதலான இதழ்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் நடத்தியும், தமிழ் மறுமலர்ச்சிக்கு ஊக்கம் தந்த சி.இலக்குவனாரின் அறிவின் திறத்தையும், தமிழ் மேன்மையையும் உலகுக்குக் காட்டிய திறத்தையும் எடுத்துரைத்தார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணை முதல்வர், உதவிப்பேராசிரியர்கள் மற்றும் மாணாக்கர்கள் கலந்து கொண்டு அன்னாரை நினைவு கூர்ந்தனர். முன்னதாக சி.இலக்குவனாரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தில் ஒவ்வொரு மாதமும் மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் தமிழறிஞர் இரா.இளங்குமரனாரின் சொற்பொழிவு நிகழ்த்தப்படுகிறது. 'நற்றிணையில் பாடுபொருள்' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது. இச்சொற்பொழிவில் எட்டுத்தொகை நூல்களுள் முதலாவது நற்றிணை. 9 அடி முதல் 12 அடி வரை உடையது. திணைப்பெயர் கொண்டது. மன அறிவு, சிந்திக்கும் அறிவு உடையவன் உயர்திணையாக எண்ணப்படுவான். விழாத உறவு உயர்திணை, வீழும் உறவு அஃறிணை என உயர்திணை, அஃறிணைப் பொருட்களை வேறுபடுத்தி எடுத்துக்காட்டினார். மக்கள் வழக்கில் இருப்பவையே பழக்கத்தில் நூலாக வெளிவருகிறது. 'இளமையில் சிறந்த வளமை இல்லை' என்னும் நற்றிணை வரிகளைக் கோடிட்டுக்காட்டி மாணவர்களுக்கு இப்போது கிடைக்கும் வாய்ப்பு முதுமையில் கிடைப்பதில்லை. அதனால் இளமையில் ஆழமாக, நுட்பமாகக் கற்றல் வேண்டும். ஆசிரியர் என்பவர் எப்போதும் படித்துக்கொண்டே இருப்பவர். உடலில் குருதி ஓட்டம் குறைந்தாலும், மனதில் உறுதி ஓட்டம் குறைந்துவிடக்கூடாது. 2381 சங்கப் பாடல்களில் காதலித்தவன் கைவிட்டதாகச் செய்தியில்லை. காதலித்தவர்கள் மணம் செய்து

கொண்டதாகத்தான் செய்தியிருக்கிறது. அந்த அளவிற்குப் பண்புமிக்கவர்களாக நம் பண்டைய மக்கள் திகழ்ந்தார்கள் என்ற செய்தியினைக் கூறினார். புன்னை மரத்தடியில் தலைவனோடு பேசுகின்ற தலைவி "நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று அன்னை கூறினாள் புன்னையது சிறப்பே அம்ம நாணுதும் நும்மொடு நகையே" என்ற வரிகளில் இயற்கையான மரங்களை உடன்பிறந்த உறவாகப் பார்த்த நாகரிகமுடையவர்கள் நம் பண்டைத்தமிழர்கள் என்ற அரிய கருத்தை எடுத்துரைத்தார். உயர்ந்தோர் நட்பு உயர்ந்ததாகவே இருக்கும் என்பதை 'புரைய மன்ற புரையோர் கேண்மை' என்ற வரிகள் மூலமாக எடுத்துரைத்து, மேலும் புணர்ச்சி என்பது வாழை + பழம் = வாழைப்பழம். ஒருவரோடு ஒருவர் கைகோர்ப்பது புணர்ச்சி எனலாம். புணர்ச்சி என்ற சொல்லைத் தவறாகப் பயன்படுத்தக்கூடாது. அது இன்பத்தை மட்டும் குறிப்பதல்ல நட்பையும் குறிக்கும். 'பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்' நண்பர், உறவினர் மகிழ்ச்சியாக இருக்கும் போது நாமும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். அவர்கள் கவலைப்படும் போது நாமும் கவலைப்பட வேண்டும். மாறுபட்டு இருந்தால் பண்பாகாது என்ற கருத்தை நற்றிணையை மையமிட்டு விளக்கிக்கூறினார். நிறைவாக 'பண்பொடு உயர்வாக வாழ்வதே சிறப்பு' என்றும், நல்ல நட்பையே நாடு என்றுகூறித் தம் உரையை நிறைவு செய்தார்.

முன்னதாக இந்நிகழ்விற்கு நான்காம் தமிழ்ச்சங்கச் செயலாளர் வழக்கறிஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் (பொ) முனைவர் சு.விஜயன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். கல்லூரித் துணை முதல்வர் முனைவர் கி.வேணுகா அவர்கள் நன்றியுரையாற்றினார். மேலும் இச்சொற்பொழிவில் நான்காம் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தமிழ் ஆர்வலர்கள், பிற கல்லூரிப் பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் செந்தமிழ்க் கல்லூரி மாணவ, மாணவியர்கள், உதவிப்பேராசிரியர்கள் கலந்துகொண்டனர்.


12.09.2016ஆம் நாள் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்றது. மகாகவி விடுதலைக் கவி நல்லதொரு இதழாளர், தேசபக்தர், பெண்ணியச் சிந்தனையாளர், முற்போக்குச் சிந்தனையாளர் எனவும், அவரது பாடல்களில் சுதந்திர உணர்வு, பெண்கல்வி போன்றவற்றிக்கு முக்கியத்துவம் அளித்தமையையும் எடுத்துரைத்து உதவிப்பேராசிரியர் கோ.சுப்புலெட்சுமி பாரதியாரை நினைவுகூர்ந்தார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணை முதல்வர், உதவிப்பேராசிரியர்கள் மற்றும் மாணாக்கர்கள் கலந்து கொண்டு அன்னாரை நினைவுகூர்ந்தனர். முன்னதாக பாரதியாரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

14.09.2016ஆம் நாள் நான்காம் தமிழ்ச்சங்கத்தின் 116ஆவது ஆண்டு துவக்கநாள் விழா சங்கவளாகத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. அன்று முற்பகல் 10.00 மணியளவில் சங்கச் செயலாளர் வழக்குரைஞர் ச.மாரியப்ப முரளி அவர்களும், தியாகராசர் கல்லூரியின் மேனாள் முதல்வர் முனைவர் மு.அருணகிரி அவர்களும், செந்தமிழ் இதழாசிரியரும், சங்க பொதுக்குழு

உறுப்பினருமான பேராசிரியர் இரா.சதாசிவம் ஆகியோர் நிறுவனர் வள்ளல் பொன்.பாண்டித் துரைத்தேவர் அவர்களது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தனர். இந்நிகழ்வில் சங்க ஆட்சிக்குழு, பொதுக்குழு உறுப்பினர்களும், கல்லூரி முதல்வர், துணை முதல்வர், உதவிப் பேராசிரியர்கள், மாணவர்களும் கலந்துகொண்டு அன்னாருக்கு மரியாதை செய்தனர். பின்னர் 10.20 மணியளவில் பாண்டியன் நூலகத்தில் நடைபெற்ற 116ஆம் ஆண்டுத் துவக்கவிழாவிற்கு சங்கச் செயலாளர் தலைமையேற்க, சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் பொறியாளர் க.சி.அகமுடைநம்பி அவர்களும், பொதுக்குழு உறுப்பினர் சாமி அய்யா அவர்களும் வாழ்த்துரை வழங்கினர். முனைவர் மு.அருணகிரி அவர்கள் தமது சிறப்புரையில் "தமிழ் ஆய்வாளர்களின் சரணாலயமாக மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் உள்ளது. இங்கு தமிழ் ஆய்வுக்குத் தேவையான ஓலைச்சுவடிகள் மற்றும் சங்க இலக்கியம், தற்கால இலக்கியத்திற்கான அரிய நூல்கள் பாதுகாக்கப்படுகின்றன. தமிழ்ப் பண்பாட்டுக் கலாச்சாரக் கருவூலமாகவே நான்காம் தமிழ்ச்சங்கம் உள்ளது என்றும், தாய்மொழி மீது நாம் பற்று வைக்கும் நேரத்தில் வேற்று மொழி மீது வெறுப்புக் கொள்ளக்கூடாது என்ற கொள்கையை உடையவர் பாண்டித்துரைத்தேவர். அவர் படைப்பாளியாகவும், இலக்கியவாதியாகவும் இருந்ததால், மற்ற படைப்பாளிகளை ஆதரித்துவந்தார் என்றார். முன்னதாக மேனாள் பேராசிரியரும், இந்நாள் சங்க பொதுக்குழு உறுப்பினருமான க.செயமூர்த்தி அவர்கள் வரவேற்புரையில் முதல், இடை மற்றும் கடைசங்களின் தோற்றம் மற்றும் மறைவு குறித்து மிக விரிவாக எடுத்துரைத்தார். மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம், வள்ளல் பாண்டித்துரை அவர்களால் தோற்றுவிக்கப்பட்டதின் நோக்கம் குறித்தும், அதன் செயல்பாடு குறித்தும் எடுத்துரைத்தார். துணை முதல்வர் கி.வேணுகா நன்றியுரையாற்றினார். நிகழ்வில் சங்க ஆட்சிக்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மதுரை நகர தமிழார்வலர்கள், கல்லூரி முதல்வர், உதவிப்பேராசிரியர்கள், மாணாக்கர்கள் கலந்துகொண்டனர்.

15.09.2016ஆம் நாள் மறைமலை அடிகள் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வு சங்க வளாகத்தில் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்றது. அன்னாரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. துணை முதல்வர் கி.வேணுகா அவர்கள் தமது நினைவுரையில் மறைமலை அடிகள் தமிழ்ப் பெரும்புலவர்களில் ஒருவர். ஆங்கிலத்திலும், வடமொழியிலும் புலமைபெற்றவர். அடிகள் நல்லாசிரியராகவும், ஆராய்ச்சி யாளராகவும் புகழ்பெற்றது குறித்தும், தனித்தமிழ் இயக்கம் கண்ட அவரது தலையாய தொண்டு குறித்தும், அவர்களது படைப்பு குறித்தும் மாணவர்களுக்கு ஏற்றநடையில் எடுத்துரைத்தார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், உதவிப்பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணாக்கர்கள் கலந்து கொண்டு அன்னாரை நினைவுகூர்ந்தனர்.

## அக்டோபர் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்




ம.பொ.சி
(அக்.3)



பட்டுக்கோட்டை
கல்யாணசுந்தரனார்
(அக்.8)



மு.வரதராசனார்
(அக்.10)



வெள்ளக்கால்
ப.சுப்பிரமணிய முதலியார்
(அக்.12)



சுந்தரராமசாமி
(அக்.14)



கண்ணதாசன்
(அக்.17)



மு.கதிரேசன்
செட்டியார்
(அக்.24)



ஜோசப்
முண்டஸ்ஸேரி
(அக்.25)

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

### ஆசிரியர் குழு

**முதுமுனைவர் திரு. இரா.இளங்குமரன்**

முனைவர் திரு. அ.அ.மணவாளன்
முனைவர் திரு. இராமசுந்தரம்
முனைவர் திரு. ம.திருமலை
முனைவர் திரு. இ.மறைமலை
முனைவர் திரு. பெ.சுயம்பு
முனைவர் திரு. செ.கந்தசாமி
முனைவர் திரு. முருகரத்தனம்
முனைவர் திரு. கு.வெ.பாலசுப்பிரமணியன்
முனைவர் திரு. மு.மணிவேல்
முனைவர் திரு. ம.பெ.சீனிவாசன்
முனைவர் திரு. இ.கி.ராமசாமி
முனைவர் திரு உ.கருப்பத்தேவன்

RNI Regd. No.5508/56 December 2014 MA/130/2014-2016

Posted at Madurai BPC on 25th of every month

# செந்தமிழ்க் கல்லூரி



## நான்காம் தமிழ்ச்சங்கம், மதுரை

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, நிகரி: 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

முனைவர் சு.விஜயன்
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கம் சாலை,
மதுரை - 625 001.

From
THE SECRETARY
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001, TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: ச.மாரியப்பமுரளி M.A.,B.L.,செயலாளர்
54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: இரா.சதாசிவம், 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: ஜெயஸ்ரீ கிராபிக்ஸ், காமராஜர்சாலை, மதுரை-625 009.